தனிப் பிரதி ரூ. 5/–
ஆண்டுச் சந்தா ரூ. 60/–

Shalom

# அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்

மலர் : 9 இதழ் : 12 அக்டோபர் – 2013



## "....ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்..."

(யோவான் 21 : -15-)

ஆசிரியர். பேராயர். வே. தேவதாஸ்

# ஷாலோம் சபையின் 4000 மூப்பர்களுக்கான சிறப்பு முகாம்கள்



செய்திவேளை – பிஷப் தேவதாஸ் அவர்கள்



பாடல் மற்றும் ஆராதனை வேளை



ஆடல்பாடல்களுடன் ஆராதிக்கும் மூப்பர்கள்







கூடுகையில் கலந்து கொண்ட மூப்பர்களின் கூட்டம்



சாட்சிகளைப் பகிர்ந்து கொள்ளும் மூப்பர்கள்



இந்திய தேசத்திற்காகவும், பீல் மக்களின் இரட்சிப்பிற்காகவும் கதறி அழுது ஜெபிக்கும் மூப்பர்கள்

## உங்கள் சகோதரனிடமிருந்து....

*கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!*



ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவரையும் வாழ்த்துவதோடு அக்டோபர் மாத இதழ் மூலமாக சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

தேவ கிருபையால் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் நம் ஷாலோம் ஊழியங்கள் மிகவும் சிறப்பாக தேவ நாம மகிமைப்பட வளர்ந்து வருகிறது. கடந்த செப்டம்பர் மாதம் முழுவதும் தேவன் வல்லமையாக ஊழியங்களை ஆசீர்வதித்து நடத்தினார். 3 மாநிலங்களில் 13 பிராந்தியங்களில் நடத்தப்பட்ட ஷாலோம் சபைகளின் மூப்பர்கள் முகாமில் சுமார் 4000 மூப்பர்கள் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தை பரிசுத்த ஆவியானவரின் வல்லமையுடன் பெற்றுக் கொண்டார்கள்.

மேலும் 3 மாநிலங்களிலும் ஆண்கள், பெண்களுக்காக 6 இடங்களில் நடத்தப்பட்ட ஷாலோம் வாலிபர் முகாம்களில் சுமார் 2500–க்கும் அதிகமாக வாலிபர்கள் தேவனுடைய வல்லமையைப் பெற்று சபைக்கும், தேசத்திற்கும் சாட்சிகளாக எழும்பி உள்ளார்கள்.

செப்டம்பர் மாதத்தில் சத்தியமங்கலம் பகுதியிலிருந்து ஷாலோம் பிரதிநிதி **சகோ. ஜெபசிங் சந்தோஷம்** அவர்கள் குடும்பமும் மற்றும் **பால் எபனேசர்** அவர்கள் குடும்பமும் பணித்தளத்திற்கு வருகை தந்து காச்லா பகுதி கிராம ஆலயத்தை பிரதிஷ்டை செய்தது மட்டுமல்லாமல் மார்த்தாண்டத்திலுள்ள (இயேசு ஆறுதல் அளிக்கிறார்) **சகோ. அருள்தாஸ்** அவர்களும், மார்த்தாண்டம் **சகோ. பென்னட்** அவர்களும் பணித்தளத்திற்கு வருகை தந்து சிறப்பு ஊழியங்களை நிறைவேற்றினார்கள். இந்த இதழ் உங்கள் கரங்களில் கிடைக்கும் போது தூத்துக்குடியிலிருந்து அன்பு **சகோ. ஜெயசிங் செல்வக்குமார்** குடும்பமும் பணித்தளங்களுக்கு வருகை தந்து இராஜஸ்தானில் டும்மட் கிராம ஆலயத்தை பிரதிஷ்டை செய்து தேவனை மகிமைப்படுத்துவார்கள் என்று விசுவாசிக்கிறேன்.

தேவ கிருபையால் அனைத்து சபைகளிலும் ஊழியங்கள் வளர்ந்து வருவதோடு இரட்சிக்கப்பட்டவர்களை தேவன் அனுதினமும் சபையில் சேர்த்தும் வருகிறார். புதிதாக பணித்தளங்களில் கட்டப்பட்டு வரும் 25 கிராம ஆலயங்களின் கட்டுமானப் பணிகளுக்காக ஜெபியுங்கள். நமது ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலம் நடைபெற்று வரும் பள்ளிக்கூடம், மாணவர் விடுதிப் பணிகள் மற்றும் உயர்க்கல்வி நிறுவனங்கள், மாணவர்களுக்கான கல்வி போன்ற உதவித்திட்டங்கள் குறிப்பாக Compassion மூலமாக ஹிரோலா, ஜெரி, அந்தர்வேலியா கிராமங்களில் பயன் பெறும் மாணவர்களுக்காக தேவனைத் துதித்து, ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

அக்டோபர் மாதத்தில் 50 புதிய சுதேச ஊழியர்களைத் தெரிந்தெடுத்து பயிற்சி கொடுக்க விருப்பதற்காக விசேஷமாக ஜெபியுங்கள். **2013 அக்டோபர் 6,13,20** போன்ற தேதிகளில் நடைபெற உள்ள **“ஷாலோம் மிஷன் ஞாயிறு”** (Shalom Mission Sunday) அனைத்து சபைகளிலும் ஆசீர்வாதமாக நடைபெறவும், அதே மாதம் **7,14,21 ஆகிய தேதிகளில்** நடைபெறவுள்ள ஊழியர் கூடுகைகளைத் தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

பணித்தள அலுவலக ஊழியத்திற்குத் தேவையான ஊழியர்கள் கிடைக்கப்பெறவும் மாதம் ரூ. 500/– கொடுத்து ஜெபித்து தாங்கக்கூடிய 1000 பங்காளர்கள் எழும்பவும் ஜெபித்து பிரயாசப்படுங்கள். குறிப்பாக ஷாலோம் ஊழியங்களை அந்தந்த பகுதிகளில் அறிமுகப்படுத்தி ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் எழும்பவும், ஷாலோம் பிரதிநிதிகள் எழும்பவும் ஜெபியுங்கள். கர்த்தர் ஏவினால் நீங்கள் பிரதிநிதிகளாக செயல்பட முன் வாருங்கள்.

தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலகம், ஷாலோம் ஊழிய முன்னேற்றப்பணி போன்றவற்றிலுள்ள ஊழியர்கள், கல்வி மற்றும் முன்னேற்றப்பணிகளை நிறைவேற்றி வரும் அனைத்து தேவ பிள்ளைகளையும் தேவன் ஆசீர்வதிப்பாராக. இவர்களுக்காக அனைவரும் ஜெபியுங்கள். குறிப்பாக நம் **“ஷாரோன் நினைவு மிஷன் மருத்துவமனை”** மிகவும் நன்றாக நடைபெற்று வருவதோடு உடல், உள்ளத்தில் தேவையுள்ள ஜனங்கள் அனுதினமும் வந்து சிகிச்சைப் பெற்று பலன் அடைந்து வருகிறார்கள். இந்த மருத்துவமனையைப் பொறுப்பேற்று நடத்தும் **Dr. இன்பக்குமார் ஜோசப்** அவர்களுக்காகவும், இன்னும் மருத்துவப் பணிக்களுக்கான தளவாடங்கள், உபகரணங்கள் வாங்குவதற்கு **ரூபாய் ஐந்து இலட்சங்கள்** கிடைக்கப்பெற ஜெபியுங்கள். உங்கள் அனைவரின் குடும்பங்கள், சபை மற்றும் ஊழியங்களுக்காக, நீங்கள் செய்து வரும் தொழில் மற்றும் வேலைகளுக்காக அனுதினமும் ஜெபித்து வருகிறோம்.

**என் மனைவி வஹிதா தேவதாஸ் மற்றும் பிள்ளைகள் டைட்டஸ் – மெர்லின் பணித்தளத்திலிருந்து உங்களை வாழ்த்தி வருவதோடு உங்களுக்காகவும் ஜெபிக்கின்றார்கள். மீடியாவில் சிறப்பு பயிற்சி பெற்று வரும் எனது இரண்டாவது மகன் ஷாலோம் பயிற்சியினை வரும் டிசம்பரில் முடித்து, பணித்தளத்தில் ஊழிய பொறுப்பேற்கும் அவனுக்காகவும், ரஷ்யாவில் நான்காம் ஆண்டு மருத்துவப் படிப்பு படித்துவரும் எனது மகள் ஷெக்கினாவிற்காகவும் ஜெபியுங்கள்.**

**“நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்.”** (யோவான்: 14 : 13) என்ற வசனத்தின்படி தேவன் தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக!


*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(பேராயர் **V.** தேவதாஸ்)

என்னுடன் தொடர்பு கொள்ள
09377445468 (குஜராத்) 9443965468 (தமிழ்நாடு)

# கர்த்தாவே உம்மில் அன்பு கூறுவேன்!

சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**





தேவன் மண்ணிலிருந்து மனிதனை தம் சாயலாக உருவாக்கி பலுகிப் பெருக வைத்து ஆசீர்வதித்தார். ஏதேன் தோட்டத்தில் ஆதாம் பாவம் செய்த போதும் தேவ அன்பின் நிமித்தமாய் அவனுக்கு உதிர்ந்து போகும் இலையினாலான ஆடையையல்ல இரத்தம் சிந்தப்பட்டு உரிந்தப்பட்ட ஜீவனின் தோலை உடையாகக் கொடுத்தார். நம்முடைய நீதி, கந்தையும் குப்பையுமாகத்தான் காணப்படுகிறது. நமக்காக கல்வாரியில் தோல் உரிக்கப்பட்டவராய் சிலுவையில் இரத்தம் சிந்தி மரித்த இயேசுவின் மூலமாக ரட்சிப்பின் உடையை நமக்குத் தந்துள்ளார்.

ஆபிரகாம் மூலமாக தேவன் தமக்கு சொந்த ஜனமாகிய இஸ்ரவேலைத் தெரிந்து கொண்டு பலுகிப் பெருகப்பண்ணி ஆசீர்வதித்தார். சுமார் 400 வருடங்கள் எகிப்தின் அடிமைத்தனத்தில் வாழ்ந்த தம்முடைய இஸ்ரவேல் ஜனங்களை அன்பினால் தம் தாசனாகிய மோசேயின் மூலமாக விடுவித்தார். ஓங்கிய புயத்தினாலும், பலத்தக் கரத்தினாலும் 40 வருடங்கள் வனாந்திரப் பாதையில் நடத்தி வந்த போது அவர்கள் பாதரட்சை பழசாகாமலும், உடுத்தியிருந்த துணிமணிகள் கிழிந்துப்போகாமலும் பசிக்கு மன்னாவையும், காடைகளையும், நீரூற்றுகளையும், பேரீச்சம் பழ மரங்களையும் தந்து வழி நடத்தினார். சத்துருவாகிய எகிப்தின் சேனைகளை கடலில் மூழ்கடித்து எரிகோ கோட்டைகளைத் தகர்த்தெரிந்து, யோர்தான் நதியைப் பிளக்கச் செய்து யுத்தங்களை நடத்தி வழி நடத்தினார்.

இஸ்ரவேலைத் தமக்காகத் தெரிந்து கொண்டார் என்று வேதம் சொல்லுகிறது. தேவன் தாமே தெரிந்து கொண்டு அவர்களை சொந்த ஜனமாக நேசித்தார். **“நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம், பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் தமக்குச் சொந்தமாயிருக்கும்படி தெரிந்துகொண்டார்”.**

**“கர்த்தர் உங்களில் அன்பு கூர்ந்ததினாலும், உங்கள் பிதாக்களுக்கு இட்ட ஆணையைக் காக்க வேண்டும் என்பதினாலும்; கர்த்தர் பலத்த கையினால் உங்களைப் புறப்படப்பண்ணி, அடிமைத்தன வீடாகிய எகிப்தினின்றும் அதின் ராஜாவான பார்வோனின் கையினின்றும் உங்களை மீட்டுக் கொண்டார். ”** (உபாகமம்: 7: 6,8) தேவன் தம்முடைய ஜனங்களை நேசித்து வழிநடத்தி ஆசீர்வதிக்கும் போது தம்முடைய ஜனத்திடம் எதை எதிர்பார்க்கிறார். உபாகமம் 6: 4, 5; உபாகமம்: 10:12,13 ஐ வாசித்துப் பாருங்கள்.

**“இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்.” “நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக.”( உபாகமம்: 6:4,5)**

பிதாவாகிய தேவன் சொந்த ஜனமாகிய நம்மிடத்தில் இவ்வளவு அதிகமாய் அன்புகூர்ந்தபடியால் நாமும் தேவனிடத்தில் முழுமையாக அன்பு கூர வேண்டும். தேவனிடத்தில் அன்பு கூர்ந்த ஒரு சிலரைப்பற்றி தியானிப்போம்.

**தேவனிடத்தில் அன்பு கூர்ந்த தாவீது**

தேவன் தெரிந்து கொண்டு அபிஷேகித்த சவுல் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்த போது தேவன் அவரை வெறுத்து தள்ளிவிட்டு, அதற்குப் பதிலாக தன் இருதயத்திற்கு ஏற்றவனைத் தேடினார். **“பின்பு அவர் அவனைத் தள்ளி, தாவீதை அவர்களுக்கு ராஜாவாக ஏற்படுத்தி, ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்திற்கு ஏற்றவனாகக் கண்டேன்; எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் அவன் செய்வான் என்று அவனைக் குறித்துக் சாட்சியுங் கொடுத்தார்”.(அப்: 13 : 22)** ஐ வாசித்துப்பாருங்கள்.

தாவீதை தேவன் தன் இருதயத்திற்கு ஏற்றவன் என்று எப்படித் தெரிந்து கொண்டார். தாவீதின் வாழ்க்கையில் கர்த்தருக்குப் பிரியமான அநேக காரியங்களை அவன் செய்ததாக நாம் வாசித்து அறிகிறோம். அதில் பிரதானமான ஒன்று என்னவெனில் சங்கீதம் 18:1 ல் – என் பெலனாகிய கர்த்தரில் அன்பு கூறுவேன் என்று தாவீது சொல்கிறார். தாவீது சிறுவயது முதல் தேவனை நேசித்தவன். தேவனை நேசிப்பதால் சங்கீதங்களின் பாடல்களை உருவாக்கினான். மட்டுமல்ல ஆராதனை வீரனாகவும் காணப்பட்டான். தன் வாழ்வில் எவ்வளவு உயர்ந்த ஆசீர்வாதங்களை தேவன் கொடுத்து முழு இதயத்தையே தேவனுக்கு கொடுத்தப்போதிலும் உலகத்தையும், உலக ஆசீர்வாதங்களையும் நேசிக்காமல் முதல் அன்பையும், முழு அன்பையும் தேவனிடத்தில் செலுத்தினான். சங்கீதம் 18:2 இல் அதை வெளிப்படுத்தியுள்ளார். **“ கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகரும், என் தேவனும், நான் நம்பியிருக்கிற என் துருகமும், என் கேடகமும், என் இரட்சண்ய கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறார்”. (சங்கீ: 18: 2)**

ஆகவே தான் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவனாகவும், அவர் சித்தப்படி செய்கிற தேவ மனிதனாகவும் சாட்சியாக காணப்பட்டார். தேவன் மீதுள்ள அன்பின் நிமித்தமாக தேவனுக்கு ஆலயம் கட்டுவதற்கு முன்வந்தபோது தேவன் தாவீதுடன் உடன்படிக்கை செய்து தம்முடைய கிருபைகளை அவர் சந்ததிக்கும் கட்டளையிட்டார். நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம் புதிய ஏற்பாட்டில் ஆரம்பிக்கும் போது ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு என்று எழுதப்பட்டுள்ளது. தாவீதைப்போல் நாமும் வாழும் போது நிச்சயம் தேவன் நம்மையும், தாவீதைப்போல ஆசீர்வதிப்பார்.

## இயேசுவினிடத்தில் மிகவும் அன்பு கூர்ந்த பாவியான ஸ்திரீ

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உலகத்தில் வந்து ஊழியம் செய்த நாட்களில் அவருக்கு பின் சென்றவர்கள் ஆயிரமாயிரமாய் இருந்தார்கள். அவரிடத்தில் அற்புதக் சுகம் தெய்வீக விடுதலை போன்றவற்றை மட்டுமல்லாமல் பாவ மன்னிப்பையும் பெற்று புது வாழ்வு பெற்று ஆசீர்வதிக்கப்பட்டோர் அநேகர் அவருடைய வார்த்தைகளை ஏற்றுக் கொண்டு தங்களை சீஷர்களாக அர்ப்பணித்து பின்பற்றியவர்கள் அநேகராய் இருந்தார்கள். ஆனால் அவரை முழு மனதோடு உண்மையாய் நேசித்து அவரிடத்தில் அன்பு கூர்ந்தவர்கள் சிலர் மட்டுமே காணப்பட்டார்கள்.

லூக்கா 7–ஆம் அதிகாரத்தில் 36 முதல் 50 வரையுள்ள வசனங்களில் இவரைக் குறித்து வாசிக்கிறோம். பரிசேயரில் ஒருவன் தன்னுடனே போஜனம் பண்ண இயேசுவை அழைத்தான். அவன் வாழ்க்கையில் உள்ளான மாறுதல் இயேசுவின் பேரில் அன்பு இவைகளைக் காண முடியவில்லை. இயேசு தன் வீட்டிற்கு வந்து, போஜனம் செய்ய வேண்டும் மற்றவர்களுக்கு முன்பாக இயேசு கிறிஸ்து என் வீட்டிலும் வந்து போஜனம் செய்தார் என்று பெருமையாகச் சொல்ல மனதில் எண்ணம் கொண்டான். நம்மில் அநேகர் பெயரளவில் கிறிஸ்தவனாக வாழ கிறிஸ்துவின் பெயர் வேண்டும் என்றும் ஆலயத்தில் நல்ல பெயர் பெற்று பிறர் காணும்படி நற்செயல்களை கடவுளின் பெயரால் செய்து விட்டால் போதும் என்று நினைத்து ஆவிக்குரிய தனிப்பட்ட வாழ்க்கையில் எவ்வித சாட்சியும் மாறுதலும் இல்லாமல் வாழ்கிறோம். இரட்சிப்பின் அனுபவம் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் ஏதுமின்றி எவ்வித நல்ல காரியங்களைச் செய்தாலும் மனிதர்கள் காண்பதற்கு மட்டுமே அன்றி இதனால் எந்தப் பலனுமில்லை.

ஆனால், அந்த பாவியான ஸ்திரீயைக் குறித்துப் பாருங்கள். இயேசுவைக்குறித்து கேள்விப்பட்டு அவர் வார்த்தையால் தொடப்பட்டு அவளின் உள்ளான மனம் மாறிவிட்டது. மறுபடியும் இயேசுவை எப்படியாவது காண வேண்டுமென்று வாஞ்சையுடன் அவருக்கு நான் ஏதாகிலும் செய்ய வேண்டும் என்ற மிகுதியான அன்பின் நிமித்தம் அந்த பரிசேயன் வீட்டுக்கு ஓடோடி வந்தாள். தன்னைச் சுற்றியுள்ளவர்கள் என்னைப்பற்றி என்ன சொல்வார்கள் என்ற பயமில்லாமல், காரணம் இயேசு என்னைப்பற்றி என்ன கூறுகிறார் என்பது தான் அவள் மனதில் இருந்தது. தன் பாவங்களை முழுமையாக அறிக்கை செய்து மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்ற சந்தோஷம். இயேசு கிறிஸ்துவில் இனி எனக்கு ஒரு புதுவாழ்வு கிடைத்தது இதுவரை உலகத்தில் உள்ள மனிதர்களை திருப்திபடுத்தி சந்தோஷப்படுத்தி என் வாழ்வில் உலக பொருட்களும் பணமும் பெயரும் கிடைத்தது. ஆனால் இரட்சிப்பு சமாதானம் கிடைக்காமல் இயேசு என் வாழ்வில் வந்தபடியால் விந்தையான மாற்றம் கிடைத்தது என மகிழ்ந்தாள்.

தான் பெற்றுக் கொண்ட இரட்சிப்பின் மகிழ்ச்சி, பாவத்தில் இருந்து விடுதலையை முற்றிலும் அனுபவித்தபடியால் இயேசுவை நேசிக்க ஆரம்பித்தாள். உலகத்தில் உள்ள அன்பைக் காட்டிலும் இயேசுவின் மீதுள்ள அன்பு தான் பெரியது என உணர்ந்து இயேசுவின் பாதங்களின் அருகே அமர்ந்து கண்ணீரால் நனைத்து தலைமயிரினால் துடைத்து முத்தமிட்டு விலையேறப்பெற்ற பரிமள தைலத்தை ஊற்றுகிறாள் என்பதைக் காண்கிறோம்.

ஆனால் பரிசேயரால் அதை மனதில் ஏற்றுக் கொள்ள முடியவில்லை ஆகவே தான் இயேசு கிறிஸ்து மன்னிக்கப்பட்டவனுடைய உவமையை அழகாக விளக்குகிறார். எவனுடைய பாவங்கள் அதிகம் மன்னிக்கப்பட்டதோ அவன் அதிகமாய் அன்பு கூறுவான் என இயேசு கூறி இவள் என்னிடத்தில் மிகவும் அன்பு கூர்ந்தாள் என்று தேவன் மீது வைத்த அன்பை விளக்குகிறார் எனக்கு அன்பானவர்களே நம் பாவங்கள் சாபங்கள் நோய்களை சுமந்து தீர்த்த இயேசுவை எவ்வளவு அதிகம் நேசிக்கிறோமோ அந்த அளவுக்கு நம்முடைய அன்பை நாமும் வெளிப்படுத்தும்போது. நம்முடைய பாடல் துதி ஆராதனையை உற்சாகத்துடனும் வேதவாசிப்பு ஆர்வத்துடனும் இருக்கும். தேவனுடன் கூடிய ஜெப வாழ்வு மகிமையாயிருக்கும். அவருக்காக கொடுப்பதும் உதாரத்துவமாயிருக்கும். நாம் இயேசுவை அதிகமாய் அன்பு கூறுவதை இந்த உலகமே ஆச்சரியமாக காணும் என்பதில் சந்தேகமில்லை.

**இயேசு கிறிஸ்துவை மனதார நேசித்த பேதுரு**

இயேசு மரணமடைந்தபின் பேதுரு மற்ற சீஷரை அழைத்துக் கொண்டு உலக வேலைக்குச் செல்கிறார் பரிசுத்த யோவான் எழுதின சுவிஷேசத்தில் 21–ஆம் அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து பரத்துக்கேறுவதற்கு முன்பாக 40 நாட்கள் சீஷர்களுக்கும் தனக்கன்பானவர்களுக்கும் காட்சியளித்தார். எனவேதான் சுவிஷேசப்பணி வெற்றிகரமாக உலகமெங்கும் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

அப்போதுதான் உயிர்த்தெழுந்த இயேசு பேதுருவுக்கும் மற்ற சீஷர்களுக்கும் காட்சி கொடுக்கிறார். அநேக திரளான மீன்கள் கிடைக்கும்படி அற்புதத்தை செய்து -பிள்ளைகளே- என்று அழைத்துத்தன் அன்பைக் காட்டி அவரே உணவை ஆயத்தமாக்கி போஜனம் தருகிறார். போஜனம் செய்த பின்பு இயேசு ஒரே கேள்வியை மூன்று முறை கேட்கிறார். மூன்று முறை தன்னை மறுதலித்த பேதுருவை நோக்கி என்னை நேசிக்கிறாயா? என்னில் அன்பு கூறுகிறாயா? என்று கேட்கிறார்.

பேதுருவே இந்த உலகத்தில் உள்ள நீ நேசிக்கிற இந்த கடல், அலைகள், மீன்கள், படகு, வலைகள், சொந்த ஜனம், உலக ஆதாயம் இவைகள் எல்லாவற்றை விட என்னை அதிகமாய் நேசிக்கிறாயா என்று கேட்டவுடன் பேதுருவின் உள்ளத்தில் இருந்த இயேசுவின் மீது கொண்டுள்ள அன்பு வெளிப்படுகிறது. ஆம், ஆண்டவரே நான் உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்று தன்னை அர்ப்பணிக்கிறான். இயேசு கிறிஸ்து பேதுருவை நோக்கி என் ஆடுகளை மேய்ப்பாயாக என்று சொல்லி பாரமான பணியைத் தர பேதுருவும் அதை ஏற்றுக் கொள்கிறார்.

எனக்கன்பானவர்களே, நாம் இயேசுகிறிஸ்துவின் சுவிஷேசத்திற்காக பேதுருவைப் போல் 3000, 5000 என ஆத்துமாக்களை ஆதாயம் செய்து இயேசு இன்றும் ஜீவிக்கிறார் என்பதை உலகத்திற்கு வெளிப்படுத்தவே வந்திருக்கிறோம். எனவே பேதுருவைப் போல் உலகத்தையும் அதில் உள்ள எல்லாவற்றையும் விட முதல் அன்பு முழு அன்பை தேவனிடம் காட்டும் நபர்களைக் கொண்டு தான் தேவன் மிக பெரிய காரியங்களை சாதிக்க முடியும்.

இயேசுவை அதிகம் நேசித்து முழுமனதுடன் அன்பு செலுத்தினால்தான் அவருக்காக மிகப்பெரிய காரியங்களை நாம் செய்ய முடியும். தேவனுக்காக வைராக்கியமாக பயன்படுத்திய அப்போஸ்தலர்கள், மிஷனெரிகள், தீர்க்கத்தரிசிகள், போதகர்கள், மேய்ப்பர்களைக் கண்ணோக்கிப் பாருங்கள். எவ்வளவு அதிகம் இயேசுவை நேசிக்கிறார்களோ அவ்வளவு அதிகமாக தேவன் பயன்படுத்துவார்.

நான் என் 19–ஆம் வயதில் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு சமாதானம் இரட்சிப்பு சந்தோஷத்தைப் பெற்றேன். இவ்வுலக வாழ்வில் அன்பு சமாதானம், கிடைக்கப் பெறாத வேளையில் தற்கொலை செய்து உயிரை மாய்த்துக் கொள்ளத் தீர்மானித்த நேரத்தில் தான் தேவன் என்னைத் தெரிந்து கொண்டு பேர் சொல்லி அழைத்து ஊழிய அழைப்பையும் கொடுத்தார். என் 21 – ஆம் வயதில் ஊழிய அழைப்பு இருப்பினும் உலகத்தில் முதலாவது பணம், பொருள் பெயர் சம்பாதிக்கத் தீர்மானித்தேன். அதுதான் முதல் தேவையென நினைத்தேன். 21 வயதில் ஊழியத்திற்கு அல்ல சில ஆண்டுகள் கழித்துச் செல்லலாம் எனத் தீர்மானித்தேன். பணம் சம்பாதித்து மிஷனெரி ஊழியங்களைத் தாங்க வேண்டும். ஆலயங்களைக் கட்டி கொடுக்க வேண்டும் என நினைத்து சம்பாதிக்க ஆரம்பித்தேன்.

1981 ஆம் ஆண்டு அக்டோபர் மாத்தில் தாராபுரத்தில் ஒரு வியாபார சம்பந்தமாக வந்தபோது நடந்த கிதியோனியர் முகாமில் பங்கு பெற தேவன் கிருபை தந்தார். என் ஆவிக்குரிய வாழ்க்கை பலப்படுத்த நினைத்து அந்த முகாமில் பங்கு பெற்றேன். அந்த முகாமில் தான் சகோ. ஸ்டான்லி பிரின்ஸ் அவர்கள் என் சொந்த ஊராகிய சிவகாசிப் பட்டணத்திற்கு இங்கிலாந்திலிருந்து கிறிஸ்துவின் அன்பினால் ஏவப்பட்டு வந்த மிஷனெரி ராக்லாண்டு வரலாற்றை கூறினார்கள். அன்பு அண்ணன் **சகோ. பேட்ரிக் ஜாஷ்வா** அவர்கள் பாரத தேசத்தில் கோடிக்கணக்கான ஆத்துமாக்கள் இயேசுவின் பெயர் அறியாமல் வாழ்வதை எடுத்துரைத்தார்கள். அன்று பேதுருவிடம் கேட்ட அதே ஆண்டவர் இந்த முகாமில் என்னிடத்தில் இடைப்பட்டார். **தேவதாஸ்** நீ என்னை நேசிக்கிறாயா என கேட்டவுடன் நான் தேவ அன்பினால் நிறையப்பட்டவனாக உம்மை நேசிக்கிறேன் என அர்ப்பணித்தேன். ஒரு ஜாதி மக்கள் உனக்குத் தருவேன் என்று வாக்கு கொடுத்த ஆண்டவர் 1985 ஆம் ஆண்டு திருமணமான அதே வாரத்தில் பீல் ஆதிவாசி மக்களை தரிசனத்தில் தந்து 27 வருடங்களாக பீல் மக்கள் ஆத்தும ஆதாயப் பணியில் பயன்படுத்தி வருகிறார். இன்னும் 3 வருடங்களில் 1000 திருச்சபைகள், 1000 பீல் சுதேச ஊழியர்கள் எழுப்பப்பட்டு பல இலட்சங்கள் இயேசுவின் மந்தையில் இணைக்கப்பட்டு தேவன் தந்த தரிசனப்பணி நிறைவேற அர்ப்பணித்துள்ளோம்.

எனக்கன்பானவர்களே, பிதாவாகிய தேவன் நம்மைப் பார்த்து கூறுகிறார் : **"உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்பு கூறுவாயாக"**. நம் இரட்சகர் இயேசு கிறிஸ்துவும் நம்மை பார்த்துக் கேட்கிறார் என்னை நேசிக்கிறாயா? என்னில் அன்பு கூறுவாயா? ஆண்டவரே நான் உம்மை முழு மனதோடு நேசிக்கிறேன் என்று அர்ப்பணிப்போம். தாவீதைப் போல், பாவியான ஸ்திரீயைப் போல், பேதுருவை போல் நாம் இயேசுவின் மேல் அன்பு கூறுவோம்.

**"நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறது போல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்". (யோவான்: 15: 10)**

## ¡±vÕUv Ti¥ûLÛv
## B§Yô£ UdLs ùLô i Pô¥P ERÜeLs



**"உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி". யோவான் 1:9**

உலகத்தை இரட்சிக்க பாலகனாய் பூமியில் கிறிஸ்து அவதரித்த அந்த நன்னாளில், கிறிஸ்துவின் தியாகத்தையும், தாழ்மையையும் நினைத்து நன்றி கூறுவதோடு மட்டுமல்லாமல் அவருடைய சுவிசேஷத்தை உலகத்திற்கு அறிவிப்பதும் நமது கடமையாகும். கிறிஸ்து பிறந்த அந்த நாளை நினைத்து நாம் கொண்டாடுவது மட்டுமல்ல, நம்மை சுற்றியுள்ள எளியவர்களுக்கு நம்மால் இயன்ற வகையில் உதவி செய்ய கர்த்தர்தாமே நம்மை பலப்படுத்துவாராக!

வருடந்தோறும் கிறிஸ்துமஸ் காலங்களில் நம்முடைய சுதேச ஊழியர்களுக்கும் அவர்கள் மனைவிமார்களுக்கும், அவர்கள் பிள்ளைகளுக்கும் புத்தாடைகள் கொடுத்து, அவர்களும் கிறிஸ்துமஸ்–ஐ மகிழ்ச்சியாய் கொண்டாட உதவி செய்ய தேவன் நமக்குத் தந்த கிருபைக்காக அவரைத் துதிப்போம். அதே போல் நம்முடைய பள்ளி மற்றும் விடுதியில் படித்துவரும் நம் ஆதிவாசி மாணவ, மாணவிகளுக்கும், சிறு பிள்ளைகளுக்கும் புத்தாடைகள் மற்றும் வெகுமதிகளை கிறிஸ்துமஸ் தினங்களில் கொடுத்து வருகிறோம்.

இந்த ஆண்டும் இந்த காரியங்களுக்காக சுமார் ரூ. 10 லட்சங்கள் வரை தேவையுள்ளது. ஆகவே கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவினால் **ஒரு சுதேச ஊழியரின் குடும்பத்திற்கு குறைந்தது ரூ. 1000/–** அல்லது அதற்கு மேலாகவோ, **ஒரு பீல் ஆதிவாசி மாணவருக்கு குறைந்தது ரூ. 500/–** அல்லது அதற்கு மேலாகவோ, கிறிஸ்துமஸ் வெகுமதியாக **அக்டோபர்** அல்லது **நவம்பர் மாத ஆதரவுத் தொகையோடு சேர்த்துக்** கொடுத்து உதவ அன்பாய் அழைக்கிறோம்.

நீங்கள் கொடுக்க விரும்பும் காணிக்கைகளை நேரடியாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கலாம். அல்லது எங்கள் ஷாலோம் பிரதிநிதிகளிடம் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளலாம்.

**"...மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்". –இயேசு (மத்தேயு 25:40)**



**இந்த பீல் மக்களின் சந்தோஷத்தோடு கிறிஸ்துமஸ்-ஐ வரவேற்று, தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வோம்!!**



# ஷாலோம் சபையின் 4000 மூப்பர்களுக்கான சிறப்பு முகாம்கள்

தேவ கிருபையாலும், அநேக ஜெப ஆயத்தங்கள் மூலமாகவும் இவ்வருடம் 3 மாநிலங்களிலுள்ள 600–க்கும் அதிகமான ஷாலோம் சபைகளின் மூப்பர்களுக்கான சிறப்புக் கூடுகைகள் 3 மாநிலங்களில் 13 பிராந்தியங்களாக பிரிக்கப்பட்டு 13 இடங்களில் செப்டம்பர் மாதத்தில் நடைபெற்றது. சுமார் 4000–க்கும் அதிகமான மூப்பர்கள் மற்றும் சுதேச ஊழியர்கள் போதகர்கள் கலந்து கொண்டார்கள்.

முதல் ஒரு மணி நேரம் தங்கள் சொந்த பீல், பிலோடி, வாகுடி மொழிகளில் தேவனைத் துதித்து பாடல்களை சபை சபையாக, குழுவாகப் பாடினார்கள். அதைத் தொடர்ந்து 1 மணி நேரம் துதி ஆராதனையை ஹிந்தி, குஜராத்தி பாடல்களைப் பாடி ஆராதனையின் மகிமை பிரசன்னத்தில் கடந்து வந்தார்கள். **சகோ. பிராங்க்ளின்** மற்றும் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** சிறப்பாக நடத்தும்படி தேவன் கிருபை தந்தார். அதன்பின்பு 1 மணி நேரம் சொந்த பீல் மக்கள் இரட்சிப்பிற்காக, பாரத தேசத்தின் ஆசீர்வாதத்திற்காக மாநிலங்களின் ஆசீர்வாதத்திற்காகவும் சபை எழுப்புதலுக்காகவும் ஆத்துமப் பாரத்துடனும் கண்ணீருடனும் ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து சபை வளர்ச்சிக்கான திட்டங்கள் குறிப்பாக 2015–ஆம் ஆண்டு 25–ஆம் ஆண்டு இறுதிக்குள் 1000 பீல் சுதேச ஊழியர்கள், 1000 திருச்சபைகள் இலக்கை நிறைவேற்ற விசுவாசிகளாக, மூப்பர்களாக, போதகர் மற்றும் ஊழியர்களாக ஜெபிக்க, ஆத்தும ஆதாயம் செய்ய, தேவனுடைய இராஜ்ஜியத்தைக் கட்டுபவர்களாக கொடுக்க அர்ப்பணித்தார்கள். 2020–ஆம் ஆண்டிற்குள்ளாக 1 கோடி பீல் மக்கள், 7000 கிராமங்களும் சந்திக்கப்பட ஆத்துமப் பாரத்துடன் ஜெபித்தார்கள்.

இறுதியில் **பேராயர். தேவதாஸ்** அவர்கள் சபை வளர்ச்சிக்காக சிறப்புச் செய்தியை வழங்கி ஜெபித்தபோது பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி ஊற்றப்பட்டது. பலர் நோய்கள் பெலவீனங்கள் சாபங்களிலிருந்து விடுதலைப் பெற்றார்கள். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தையும் ஆவியின் வரங்களையும் பெற்று பீல் மக்கள் எழுப்புதலுக்கு தங்களை ஒப்புக் கொடுத்தார்கள்.

அனைத்து ஷாலோம் போதகர்கள் ஊழியர்கள் மூத்த தலைவர்களுடன் இணைந்து சிறப்பாக ஒழுங்கு செய்தார்கள். உள்ளங்கை அளவு மேகத்தைக் கண்ட இவர்கள் பெருமழையை விரைவில் காண்பார்கள் என்பதில் சந்தேகமேயில்லை.

***தேவனுக்கே மகிமை உண்டாவதாக!***

# நினைவூட்டுகிறோம்



## அன்பான உண்டியல் ஆதரவாளர்களுக்கு,

அன்பின் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! கிறிஸ்துமஸ் நாட்களை நெருங்கிக் கொண்டிருக்கும் நாம், வரப்போகின்ற கிறிஸ்துமஸைக் கொண்டாட ஜெபித்து இப்பொழுதே ஆயத்தப்படுவது நமது கடமையாகும். மேலும் நமது பணித்தளங்களில் நாம் தாங்கி வரும் பீல் ஆதிவாசி விசுவாசிகள் மற்றும் சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் நன்றாக படித்தும், ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்தும் வருகிறார்கள்.

பீல் ஆதிவாசி சிறுவர்களின் கல்வி மற்றும் கிறிஸ்துமஸ் நாளுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற வாஞ்சையோடு, நீங்கள் எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டியலில் அந்த ஆதிவாசிப் பிள்ளைகளுக்கென காணிக்கைகளை சேகரித்து வைத்திருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறோம். இந்த காணிக்கையை ஆதிவாசிப் பிள்ளைகளின் கிறிஸ்துமஸ் தேவைகளுக்காகக் கொடுப்பீர்கள் என்று விசுவாசிக்கிறோம்.

பீல் ஆதிவாசிப் பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாக கொடுக்கலாம். அல்லது எங்களது தலைமை அலுவலகத்திற்கு நேரில் வந்து கொடுக்கலாம் அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து **M.O / D.D / Cheque** மூலமாக **SHARING LOVE MISSION** என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டியலின் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறேன். உங்களுக்கு உண்டியலைத் திறக்க சாவி **(Key)** வேண்டுமானால் **9345675468** என்ற செல் நம்பருக்கு தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை **(Key)** அனுப்பி வைக்கிறோம்.

**திருநெல்வேலி, துதி ஜெப ஆலய ஆராதனையில்**

இரட்சகர் இயேசுவுக்கே மகிமை. தேவ தயவால் கடந்த 25.8.2013 ஞாயிறு காலையில் திருநெல்வேலி பழையப் பேட்டையிலுள்ள **Praise Prayer Church** - ல் நடந்த ஆராதனையில் நம் ஷாலோம் **பிஷப். V. தேவதாஸ்** அவர்கள் கலந்துக் கொண்டு தேவச் செய்தியளித்தார்கள். மிகவும் எளிமையான சபையானாலும், நமது பிஷப் அவர்களை அன்போடு வரவேற்று ஷாலோம் ஊழியங்களை முழு மனதோடு ஏற்றுக்கொண்டு, பணித்தளத்தில் ஆலயம் கட்டும்படியாக தேவன் அவர்களுக்குக் கொடுத்த பாரத்திற்காக நன்றி செலுத்துகிறோம். இந்த சபைப்போதகர், **Pr. அலெக்ஸ்** அவர்களை கர்த்தர் அதிகமாய் ஆசீர்வதிப்பாராக.

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்

## BLESS A CHILD - PROJECT



| | | |
|---|---|---|
| மாணவியின் பெயர் | : | **ரேகா** |
| தந்தையின் பெயர் | : | மோத்தி கணாவா |
| தாயார் பெயர் | : | ஷீலா கணாவா |
| பிறந்த நாள் | : | 10.12.1995 |
| படிக்கும் வகுப்பு | : | 8th Std. |
| சொந்த ஊர் | : | ஜுனாகவாசா |
| மாவட்டம் & மாநிலம் | : | ஜாபுவா, மத்தியப்பிரதேசம் |

### மாணவியின் பெற்றோரைப் பற்றிய சில வரிகள்:–

இவளுடைய தந்தை இயேசுவை அறியாத பீல் ஆதிவாசிக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அசுத்த ஆவிகளை வணங்கி வந்த இவர் திடீரென வியாதியினால் பாதிக்கப்பட்டு சரீர எரிச்சலினால் அதிக கஷ்டப்பட்டார். இதிலிருந்து விடுதலை பெற பல மந்திரப் பூஜைகளைச் செய்தும் எந்த பலனுமில்லை.

ஷாலோம் ஊழியத்தைக் குறித்து கேள்விப்பட்டு ஊழியரிடம் சென்று ஜெபித்தபோது தேவன் இவருக்குப் பூரண விடுதயைக் கொடுத்தவுடன், இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, தேவனுக்கு ஊழியம் செய்யவேண்டும் என்ற வாஞ்சையுடன் ஊழியத்திற்கு தன்னை அர்ப்பணித்து, தன் சொந்த கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறார்.

**மாணவியைக் குறித்து :–** ரேகா நன்குபடிக்கும், கீழ்ப்படிதலுள்ள மாணவி.

**ஜெபியுங்கள் :–** படிப்பிற்காக, சுகத்திற்காக, பெற்றோர் செய்யும் ஊழியத்திற்காக ஜெபியுங்கள்.

**மாணவியைத் தாங்குபவர் :–** ***Mr. Chandra Bose - Calcutta.***

**ஜெபித்துத் தாங்க முன்வாருங்கள்...**

பிரியமானவர்களே! நீங்களும் ஜெபித்து மாதம் ரூ. 600/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரைத் தாங்க முன் வரலாம். நாம் பராமரித்து வரும் 947 மாணவர்களில் இன்னும் 147 **மாணவ மாணவியர்களுக்கு ஆதரவாளர்கள் தேவைப்படுகிறார்கள்.**

***Shalom Charity Mission*** என்ற பெயரில் இதற்கான காணிக்கைகளை D.D. அல்லது Cheque மூலமாக அனுப்ப அன்பாய் கேட்கிறோம். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்கும்படியாக தயவாய் அறிமுகப்படுத்திவையுங்கள்.

# ஷாலோம் பணித்தளத்தில் நாங்கள் கண்ட பிரஸ்தாபம்

**சத்தியமங்கலம் – சகோ. ஜெபசிங் சந்தோஷம் மற்றும்**
**சகோ. பால் எபனேசர் குடும்பத்தாரின் பணித்தளப் பார்வை**

செப்டம்பர் மாதம் 15–ம் தேதி ஷாலோம் பணித்தளத்தில் புதியதாக **சகோ. பால் எபனேசர்** குடும்பத்தினர் கட்டி கொடுத்திருக்கும் ஆலயத் திறப்பு விழாவில் கலந்து கொள்வதற்காகவும், மற்றும் ஷாலோம் பணித்தளங்களைப் பார்வையிடவும் நாங்களும், **சகோ. பால் எபனேசர்** குடும்பமும் சத்தியமங்கலத்திலிருந்து வந்தோம். செப்டம்பர் 13,14,15 ஆகிய தேதிகளில் பணித்தளங்களையும், ஆலயங்களையும் கண்டு மகிழ்ந்தோம்.

கடந்த 2008–ஆம் வருடம் நாங்கள் வந்து பார்த்தபொழுது 2 நாளா. 9:6 இன் படி நாங்கள் கேள்விப்பட்ட பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் அதிகம் உண்டாயிருந்ததைக் கண்டோம். 2010–ஆம் வருடம் அதைவிட அதிகமாகவும் 2013 – செப்டம்பர் மாதத்தில் நாங்கள் கண்டது மிகவும் அதிகமாகவும் இருக்கவே, ஷாலோம் ஊழியத்தின் வளர்ச்சி ஆதித் திருச்சபையின் காரியங்களை அப்படியே திரும்பி பார்க்க வைத்தது. உண்மையாகவே இது ஒரு சரித்திரத்தில் இடம் பெற வேண்டிய ஊழியம். கடந்த நாட்களில் நாங்கள் கண்ட பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் அதிகமாயிருக்கிறது. ஷாலோம் ஊழியப்பணிகள் இங்குள்ள பீல் மக்களை மட்டும் மாற்றவில்லை. இந்த ஊழியத்தை கேள்விபட்டு வந்து பார்க்கும் ஒவ்வொரு இருதயத்தையும் மாற்றுகிறது. இதை நாங்கள் கேள்விப்பட்டு, நேரடியாகக் கண்டு தேவனை மகிமைப்படுத்துகிறோம்.

நாங்கள் கண்ட இன்னொரு காரியம் எல்லா கணக்குகள், அலுவலகத்தின் செயல்பாடுகள், இத்தனை காரியங்களுக்கு மத்தியில் பார்வையிட வருபவர்களை உபசரிப்பது நேர்த்தியாய் இருக்கிறது. ஷாலோம் திருமண்டலம் ஆத்தும ஆதாயப்பணியிலும், சமுதாயப் பணியிலும் சிறந்து விளங்குகிறது. ஷாலோம் பீல் இனத்தைச் சேர்ந்த ஒவ்வொரு போதகர்களும் தங்களால் இயன்ற சமுதாயப்பணிகளைச் செய்கிறார்கள். கோய்க்கா என்ற கிராமத்தின் போதகர் பஞ்சாயத்துத் தலைவராக வெற்றி பெற்று, அவரது ஆலயத்தின் மூலம் ஒரு பள்ளியை ஆரம்பித்து, மேலும் அறக்கட்டளையை நிறுவியுள்ளார். அரசியல் தலைவர்கள் அவரை சட்டமன்ற உறுப்பினராக மாறும்படியாக வற்புறுத்துகிறார்கள். ஒருவரும் திரும்பிப் பார்க்காமல் எல்லோராலும் ஒதுக்கப்பட்டு, பல மிஷனெரி ஸ்தாபனங்கள் இவர்களை திருத்துவது கடினம் என்று முத்திரை போட்டிருந்த பீல் மக்கள் மத்தியில் **பேராயர். தேவதாஸ், சகோதரி. வஹிதா தேவதாஸ்** இருவரும் பரிசுத்த ஆவியானவரின் துணையோடு கொண்டு வந்திருக்கும் மாற்றங்களும், வளர்ச்சியும் மிகப்பெரியது.

மேலும் தற்போது புதிதாக தொடங்கியிருக்கும் ஷாரோன் நினைவு மருத்துவமனை மிகவும் நன்றாக செயல்பட்டு வருகிறது. **டாக்டர். இன்பகுமார்** அவர்கள் நல்ல அனுபவம் பெற்றவர். இங்கு மருத்துவமனையில் பணிபுரிந்து எத்தனையோ மருத்துவமனைகள் அவரை அழைத்தும் ஷாலோம் ஊழியத்திற்கு தன்னை அர்ப்பணித்து இங்கு வந்து பீல் மக்கள் மட்டுமல்லாமல் மற்றவர்களுக்கும் சிகிச்சையளித்து வருகிறார்.

தமிழ்நாட்டில் பல கிராமங்களில் சிறிய மருத்துவமனைகள் காணப்படுகிறது. ஆனால் ஷாலோம் திருமண்டலத்தின் மருத்துவமனை எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்வதாக அமைந்துள்ளது. **அன்பு பகிர்வு இயக்கம்** மிகப்பெரிய ஊழியமாக உருவெடுத்துள்ளதற்குக் காரணமான மிக முக்கியமான ஒரு காரியத்தை ஆவியானவர் எங்களிடம் வெளிப்படுத்தியது என்னவெனில் **பேராயர். தேவதாஸ், சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களின் எளிமையும் ஒரே மாதிரியாக இருக்கும் பண்பு. 1995–ஆம் ஆண்டு எங்களுக்கு அறிமுகமான அவர்களின் குணம் எப்படி இருந்ததோ அதே மாதிரி இப்பொழுதும் 600 ஊழியர்கள், 600 திருச்சபைகள், ஷாலோம் பள்ளி, **ஷாரோன் மருத்துவமனை** இத்தனை வளச்சியின் மத்தியிலும் மாறாமல் இருக்கிறது. இது எல்லா ஊழியர்கள், திருமண்டலங்கள், ஊழியர்கள் போன்றவற்றிற்கு முன்மாதிரியாக அன்பு பகிர்வு இயக்கம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

அன்பு பகிர்வு இயக்கத்தின் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் வடஇந்தியாவில் குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் ஒரு புதுமையான முறையில் உண்மையாகவே தூய ஆவியானவரின் வழிநடத்துதலோடு இயங்குகிறது. பீல் மக்களின் தொழில் சாராயம் காய்ச்சுவது, கொள்ளையடிப்பது இப்பொழுதும் கிறிஸ்தவரால்லாத பீல் மக்கள் இதை செய்து வருகிறார்கள். இவ்வளவு கடினமான ஆதிவாசிகள் 1 கோடிக்கும் அதிகமான மக்கள் இருக்கிறார்கள். இவ்வியக்கத்தின் மூலம் கடந்த 23 ஆண்டுகளில் 1.5 இலட்சம் மக்கள் இரட்சிக்கப்பட்டு உண்மை கிறிஸ்தவர்களாய் வாழ்வதைக் கண்டு சந்தோஷப்பட்டோம். அன்பு பகிர்வு இயக்கம் 600க்கும் மேற்பட்ட திருச்சபைகளை நிறுவியதோடு நில்லாமல் வருகிற 2020–ம் ஆண்டிற்குள் பீல் மக்கள் முழுவதும் முழுமையான இரட்சிப்பைக் கண்டடையும் திட்டத்தோடு கடினமாக செயல்பட்டு வருகிறதை நேரில் கண்டோம்.

நாங்கள் இந்த 13,14,15 ஆகிய தேதிகளில் அநேக ஷாலோம் திருச்சபைகளை பார்வையிட்டு, திருச்சபை போதகர்களின் சாட்சிகளைக் கேட்டோம். அவர்களின் சாட்சிகள் ஒவ்வொன்றும் இருதயத்தை அசைப்பதாக இருந்தது. ஷாலோம் திருமண்டலத்தின் திருச்சபைகளின் ஒவ்வொரு பீல் போதகர்களும் தனது திருச்சபைக்கு முழு சுதந்தரமான தலைவர்களாக இருந்து வருகிறார்கள். இது ஷாலோம் திருமண்டலத்தின் வளர்ச்சிக்கு நல்ல திட்டமாக உள்ளது.

2 கொரி. 8:2,3 இல் காண்பது போல், பீல் விசுவாசிகள் தங்கள் கொடிய தரித்திரத்திலும் கட்டிய ஆலயத்தை விரிவாக்கம் செய்வது ஆண்டவருக்குக் கொடுப்பதிலும் மிகவும் உதாரத்துவமாய் இருப்பதைக் கண்டோம்.

இத்தகைய மாபெரும் பணியை **பேராயர். தேவதாஸ்** குடும்பத்தினர் தலைமையேற்று எளிமையாக இருந்து செயல்படுவது பீல் மக்களுக்கு கிடைத்த மிகப் பெரிய பாக்கியம். அன்பு பகிர்வு இயக்கம் என்றால் தலைமை முதல் அனைத்து தரப்பினரும் உண்மையாகவே அன்பைப் பகிர்ந்து கொடுப்பவர்களாய் இருக்கிறார்கள். அன்பை பகிர்ந்து கொள்வதில் இவர்களுக்கு இணையில்லை. தேவனுக்கே மகிமையுண்டாவதாக.



# மிஷனெரிகளாக மாறிக்கொண்டிருக்கும் பீல் ஆதிவாசி ஜனங்கள்

**- பணித்தளப் பார்வை**

பல ஆண்டுகள் குஜராத் ஷாலோம் பணித்தளத்தைப் பார்வையிட அதிக வாஞ்சையாய் இருந்த எங்களை தேவன் அற்புதமாக வழிநடத்தி கடந்த ஆகஸ்ட் மாதம் 27ஆம் தேதி பணித்தளம் வந்தடையும்படிச் செய்தார். தங்குவதற்கு எல்லா வசதிகளும் நேர்த்தியாகச் செய்து கொடுக்கப்பட்டது. எங்களைப் பரவசப்படுத்திய பணித்தள காரியங்களை தேவ நாம மகிமைக்காக சாட்சியாக எழுதுவதில் மகிழ்ச்சியடைகிறேன். 28–ஆம் தேதி காலையில் குஜராத் பணித்தளத்தை பார்வையிடும்படியாக அழைத்துச் செல்லப்பட்டோம்.

அதில் பாரேவா கிராம ஆலயம், கொலானா கிராம ஆலயம் மற்றும் வாங்கோல் கிராம ஆலயம் ஆகியவற்றைப் பார்வையிட்டு, அதன் ஊழிய வளர்ச்சியையும், மக்களின் முன்னேற்றத்தையும் கண்டு தேவனைத் துதித்தோம். கொலானா ஆலயத்தில் பெண்கள் கூடி ஜெபித்துக் கொண்டிருந்த அவர்களுடைய ஜெப வாஞ்சையைப் பார்த்து தேவனைத் துதித்தோம். 29–ஆம் தேதி காலையில் மத்தியப்பிரதேசத்தில் அந்தர்வேலியா கிராம ஆலயத்தில் நடைபெற்ற விசேஷ கூட்டத்தில் பங்கு பெற்று ஆலயம் நிரம்பி வழியத்தக்கதாக மக்கள் கூடியிருந்தார்கள். அங்கு **பாஸ்டர். ராஜசேகர்** அவர்கள் செய்தியளித்து ஜெபித்தார்கள். தொடர்ந்து மதியம் குஜராத்தில் ஹிரோலா ஆலயத்தில் வைத்து நடைபெற்றக் கூட்டத்தில் பங்கு பெற்றோம். அங்கும் மக்கள் நிரம்பி வழிந்தார்கள். அதில் **சகோ. குரூஸ் மாசிலாமணி** அவர்கள் செய்தியளித்தார்கள். எங்கு சென்றாலும் ஆலயத்தில் மக்கள் நிரம்பி வழிகிறதைப் பார்த்தபோது தேவனை அதிகமாய் துதித்தோம். 30–ஆம் தேதி குஜராத் சபைகளின் போதகர்கள் மற்றும் பணித்தள அலுவலக ஊழியர்களுக்கென்று சிறப்புக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. தொடர்ந்து 31–ஆம் தேதி மத்தியப்பிரதேசம் சபையின் போதகர்களுக்கென்றும், 2–ஆம் தேதி இராஜஸ்தான் சபையின் போதகர்களுக்கென்றும் சிறப்புக் கூட்டங்கள் நடைபெற்றது. **சகோ. ஃப்ராங்க்ளின்** அவர்கள் ஆராதனையை நடத்தினார்கள். ஊழியர்கள் பாடல்களைப் பாடி, நடனமாடி தேவனை ஆராதிப்பதைப் பார்த்தபோது மிக அருமையாக இருந்தது. அதுமட்டுமல்லாமல், சொந்த ஜனம் இரட்சிக்கப்படும்படியாய் கண்ணீரோடும், பாரத்தோடும் ஜெபிக்கிறதைப் பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டோம். அவர்களுடைய உற்சாகம், சந்தோஷத்தைப் பார்த்து நாங்களும் பரவசமடைந்தோம். 1–ஆம் தேதி ஞாயிறு அன்று 5 குழுவாகப் பிரிந்து 5 ஆலய ஆராதனைகளில் பங்கு பெற தேவன் கிருபை செய்தார்.

**சகோ. குரூஸ் மாசிலாமணி** அவர்கள் குடும்பம் மத்தியப்பிரதேசத்தில் உள்ள முண்டத் சபைக்குச் சென்று தேவ செய்தியளிக்க அதை **பேராயர். தேவதாஸ்** அவர்கள் மொழிப் பெயர்த்தார்கள். **பாஸ்டர். துரைராஜ்** அவர்கள் குடும்பமாய் மத்தியப்பிரதேசத்தில் உள்ள அந்தர்வேலியா ஆலய ஆராதனையில் பங்குப்பெற்று தேவ செய்தியளிக்க அதை **சகோ. ஜெயராஜ்** அவர்கள் மொழியாக்கம் செய்தார்கள். **சகோ. சந்திரபால்** அவர்கள்

குடும்பமாக குஜராத்திலுள்ள கங்கேலா ஆலயத்திற்குச் சென்று ஆராதனையில் பங்கு பெற்றார்கள். ஆராதனை வேளையில் மக்கள் உற்சாகமாய் நடனம் ஆடி தேவனைத் துதித்தார்கள். தொடர்ந்து **திருமதி. எலிசபெத் சந்திரபால்** அவர்கள் தங்களுக்கு தேவன் செய்த மகத்தான காரியங்களைக் குறித்து சாட்சி பகிர்ந்தார்கள். மற்றும் **சகோ. சந்திரபால்** அவர்கள் தேவசெய்தியளிக்க **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் மொழிப்பெயர்த்தார்கள்.

**பாஸ்டர். ராஜசேகர்** அவர்கள் இராஜஸ்தானில் உள்ள கும்புரா ஆலய ஆராதனையில் கலந்து கொண்டு தேவ செய்தியளிக்க அதை **சகோ. கலைவாணன்** (ARK ஊழியங்கள்) அவர்கள் மொழிப்பெயர்த்தார்கள். **சகோதரி. மேரி சாம்ராஜ்** (இயேசு விடுவிக்கிறார்) அவர்கள் குஜராத்திலுள்ள பாட்டன்புரா சபையில் கலந்து கொண்டு தேவ செய்தியளிக்க **சகோ. டேனியல்** அவர்கள் மொழிப்பெயர்த்தார்கள்.

3–ஆம் தேதி மூத்த ஊழியர்களின் மனைவிமார்களுக்கென்று விசேஷித்த கூட்டம் தாகோத்தில் நடைபெற்றது. அதில் **சகோதரி. பியூலா குரூஸ்** (இயேசுவே மீட்பர் ஊழியங்கள்) அவர்களும், **சகோதரி. மேரி சாம்ஜெபராஜ்** (இயேசு விடுவிக்கிறார்) அவர்களும் கர்த்தருடைய செய்தியளிக்க **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் மொழிப்பெயர்த்தார்கள். தேவசெய்தியின் மூலம் பெண்கள் அதிக உற்சாகமடைந்தார்கள். **தேவனுக்கே மகிமை!**

ஞாயிறு இரவு பணித்தள அலுவலகத்தில் ஊழியம் செய்து வருகின்ற தமிழ் ஊழியர்களுக்கான சிறப்பு ஆராதனைக் கூடுகையில் பங்கு பெற்று, அவரவர் தங்கள் பணித்தளத்தை பார்வையிட்டதன் அனுபவங்களை சாட்சியாக பகிர்ந்து கொண்டோம்.

**அவற்றுள் சில...**

பீல் மக்கள் கர்த்தரை நேசித்து சிறியோர் முதல் பெரியோர் வரை ஒருமனமாய் ஏகோபித்து ஆராதிப்பதைப் பார்த்து அதிக பரவசமடைந்தோம். அவர்கள் ஆராதிக்கும் போது யாருமே கண்களைத் திறந்து பார்ப்பது இல்லை. அதிக உஷ்ணமான நிலையிலும் மின்விசிறியின்றி வியர்வை வடிந்தும் உற்சாகமாய் கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறார்கள். மேலும் நேரம் பார்க்காமல் 5 மணி நேரம் அப்படியே ஆலயத்தில் அமர்ந்திருக்கிறார்கள். தண்ணீர் குடிப்பதற்குக் கூட வெளியே செல்லாமல் இருக்கிறார்கள்.

பீல் மக்கள் எத்தனையோ மைல்கள் தூரம் நடந்து வந்து, ஆலயத்தில் பங்கெடுத்து, உற்சாகமாய் வசனத்தை வாஞ்சையோடு கேட்டு, தன் சொந்த ஜனம் இரட்சிப்படைவதற்காய் கதறி கண்ணீரோடு ஜெபிக்கிறார்கள். அவர்களாகவே, ஆண்டவரிடம் ஜெபித்து கர்த்தர் செய்த அற்புதங்களை சாட்சியாகக் கூறி, விளைந்த மக்காசோளத்தை உற்சாகமாய் ஆலயத்தில் காணிக்கை செலுத்தியதைப் பார்த்த போது மிகவும் ஆச்சரியமாயிருந்தது. மட்டுமல்ல இவர்கள் கர்த்தருக்காக அதிக வைராக்கியமாய் இருக்கிறார்கள். ஆவியில் அதிகமாய் நிறைந்து, அந்நியப்பாஷை பேசி தேவனை மகிமைப்படுத்துகிறார்கள். மனம் திரும்பும் ஆதிவாசிகளே, விசுவாசத்தில் வளர்ந்து, பெலப்பட்டு ஊழியப்பயிற்சியையும் பெற்று இங்குள்ள சபைகளுக்கு போதகர்களாக நியமிக்கப்படுகிறார்கள். சமுதாயத்தில் எல்லா நிலைகளிலும் ஒதுக்கப்பட்ட இந்த ஆதிவாசிகள் இன்று வேதத்தை எடுத்து பிரசங்கித்து திருச்சபையை நடத்துக்கின்ற அளவுக்கு தேவன் எழுப்புதலைக் கொடுத்திருக்கிறார்.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது நிச்சயமாய் 1 கோடி பீல் மக்களும் இயேசுவண்டை விரைவில் வந்துவிடுவார்கள் என்று விசுவாசித்து தேவனைத் துதிக்கிறோம். இங்கு பணித்தளங்களைப் பார்வையிட்டதில் நாங்களும், அதிக உற்சாகமடைந்து ஆத்துமப்பாரத்தினால் நிரப்பப்பட்டோம். இதுவரை நாங்கள் ஷாலோம் ஊழியத்தைப் பற்றி VCD –யில் பார்த்ததை விட நேரில் பார்க்கும் போதுதான் எங்களுக்குப் புரிய முடிந்தது. சந்தோஷத்தின் மிகுதியினால் கண்களில் கண்ணீர் வடிய தேவனைத் துதித்தோம். எங்கள் பிள்ளைகள் **ஃப்ராங்க்ளின் – ஹேனா** திருமணம் நடந்து பணித்தளம் வந்தடைந்த அவர்களுக்கு குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மூன்று மாநிலங்களிலும் நடைபெற்ற ஊழியர் கூட்டத்தில் மிகவும் சிறப்பாக வரவேற்புக் கொடுத்தார்கள்.

இவர்கள் எங்கள் பிள்ளைகள் மீது வைத்திருக்கிற அன்பைப் பார்த்து ஆண்டவருக்கு நன்றி செலுத்தினோம். மேலும் இராஜஸ்தானில் உள்ள ஊழியர் கொடுத்த சிறப்பான கலாச்சார வரவேற்பு அதாவது மாப்பிள்ளையையும், பெண்ணையும் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டு நடனமாடியதைப் பார்த்து பரவசமடைந்தோம், அவர்கள் மணமக்களை வாழ்த்தும் போது பெற்றோர்கள் தங்கள் மகனை மிஷனெரி ஊழியத்திற்கென்று அர்ப்பணித்ததின் மூலம் எங்கள் பீல் மக்களுக்கு இவர் ஆசீர்வாதமாய் இருந்து வருகிறார். இப்பொழுது குடும்பமாய் மிஷனெரி ஊழியம் செய்ய முன் வந்தபடியால் இன்னும் முழு பீல் மக்களுக்கும் ஆசீர்வாதமாய் இருப்பார்கள் என்று வாழ்த்தினார்கள். இதைக் கேட்டு தேவனைத் துதித்தோம். இந்த ஊழியத்திற்காக இன்னும் அதிகமாய் ஜெபித்து, தாங்க கடமைப்பட்டுள்ளோம். தேவனுக்கே மகிமை!

**சகோ. குரூஸ் மாசிலாமணி குடும்பம்,** (இயேசுவே மீட்பர் ஊழியம், குளத்துக்குடியிருப்பு)
**சகோ. சந்திரபால் குடும்பம்,** மதுரை
**பாஸ்டர். துரைராஜ் குடும்பம்,** (ஷீலோவாம் சபை, மயிலாடுதுரை)
**பாஸ்டர். ராஜசேகர் குடும்பம்,** (ஷெக்கினா சபை, மயிலாடுதுரை)
**சகோதரி. மேரி சாம் ஜெபராஜ்,** (இயேசுவிடுவிக்கிறார், நாலுமாவடி)

## சென்னை TRINITY FULL GOSPEL CHURCH ஆலய ஆராதனையில்

தேவ நாமம் மகிமைப்படுவதாக. கடந்த 18.8.2013 அன்று ஞாயிறு காலை சென்னையில் உள்ள **Trinity Full Gospel Church** -இல் நடந்த ஆராதனையில் நம் ஷாலோம் **பிஷப். V. தேவதாஸ்** அவர்கள் கலந்துக் கொண்டு **"சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான்".** (ஏசா: 60: 22) என்ற வசனத்தின் அடிப்படையில் தேவச் செய்தியளித்தார். செய்தியைக் கேட்ட தேவ ஜனங்கள் ஆசீர்வதிக்கப்பட்டதோடு, ஷாலோம் ஊழியங்களுக்காக ஜெபிக்கத் தங்களை அர்ப்பணித்தார்கள். மேலும் சபை போதகர் அவர்களே சபையில் உள்ள ஒரு நபரை ஷாலோம் ஊழியத்தின் பிரதிநிதியாக நியமித்து, விசுவாசிகள் ஷாலோம் ஊழியங்களைத் தாங்குபடி ஊக்கப்படுத்தினார். **சகோ. R. கார்த்திகேயன்** நம் ஷாலோம் ஊழியங்களைக் குறித்து பகிர்ந்துக் கொண்டார். இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து தந்த சபைப் போதகர், **Pr. தேவஅன்பு** அவர்களை தேவன் ஆசீர்வதிப்பாராக.

# சகோ. குரூஸ் மாசிலாமணி, சகோ. சந்திரபால், பாஸ்டர். துரைராஜ், பாஸ்டர். ராஜசேகர் மற்றும் சகோதரி. மேரி சாம் ஜெபராஜ் போன்ற குடும்பத்தார்களின் பணித்தள வருகை


கலாச்சார வரவேற்பு


செய்தி – சகோ. குரூஸ் மாசிலாமணி (முண்டத், ம.பி.)


செய்தி – Pr. துரைராஜ் (செவன்யா, இராஜ்)


செய்தி – Pr. ராஜசேகரன் (கும்புரா, இராஜ்)


செய்தி – சகோ. சந்திரபால் (கங்கேலா, குஜராத்


செய்தி – சகோதரி. பியூலா குரூஸ் (தாகோத்)


செய்தி – சகோதரி. மேரி சாம் (தாகோத்)


சாட்சி – சகோதரி. எலிசபெத் (கங்கேலா, குஜராத்)


அந்தர்வேலியா கிராம சபை மக்கள்


பாரேவா, குஜராத் கிராம ஆலயத்தின் முன்


ஹிரோலா, குஜராத், கிராம சபை முன்பாக


வரவேற்பு நிகழ்ச்சியின் போது

# தலைமை அலுவலக ஊழிய சகோதரிகளின் பணித்தள வருகை



சிறப்பு வரவேற்பு – பாரேவா கிராம ஆலயம், குஜராத்



சுதேச ஊழியர் கூடுகையின் போது



தோரண்யா, ம.பி., கிராம ஆலயத்திற்கு முன்பு விசுவாசிகளுடன்



தோரண்யா, ம.பி., கிராம ஆலயத்தில் அறிமுக வேளை





பிஜல்பூர், இராஜ். ஷாலோம் ஹாஸ்டல் சிறுவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுடன்







சிறுவர்களுக்கான CDC அலுவலகங்களைப் பார்வையிட்டபோது



கிராம ஆலயங்களில் செய்தி மற்றும் தங்களது சாட்சிகளைப் பகிர்ந்து கொள்ளும் சகோதரிகள்

## சகோ. ஜெபசிங் சந்தேஷம் மற்றும் சகோ. பால் எபனேசர் அவர்களின் பணித்தள வருகை


ஜெரி, குஜராத் சபையில் செய்திவேளை - சகோ. ஜெபசிங் சந்தோஷம்


கும்புரா, இராஜஸ்தான் கிராம சபையில்


பாடல்வா, ம.பி. கிராம சபையில் கலாச்சார வரவேற்பு


டிட்டியாதேவ், இராஜ். கிராம ஆலய பிரதிஷ்டை வேளை
பிஷப். தேவதாஸ் மற்றும் சகோ. பால் எபனேசர் அவர்கள்


விசுவாசிகளுக்கு வேதாகமம் வழங்கிய போது


சபைக்கு ஸ்பீக்கர் மற்றும் மைக் செட் வழங்குதல்

## சகோ. அருள்தாஸ் (இயேசுவே ஆறுதல் ஊழியங்கள்) மற்றும் சகோ. பென்னட் (மார்த்தாண்டம்) ஆகியோரின் பணித்தள வருகை


கங்கேலா, குஜராத் கிராம சபையில் கலாச்சார வரவேற்பு


விசல்பூர், ம.பி. கிராம சபையில் கலாச்சார வரவேற்பு


செய்திவேளை – சகோ. அருள்தாஸ் அவர்கள்

# ஷாலோம் (CDC) - வாலிபர் சிறப்பு முகாம் - 2013



பாடல் வேளை



வாலிபர்களுக்கான விசேஷித்த ஜெபத்தினை ஏறெடுக்கும் சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள்



கலை நிகழ்ச்சி



வேத வினா–விடை நிகழ்ச்சியில் வெற்றி பெற்றோருக்கு பரிசு வழங்குதல்



குழு பயிற்சி வேளை



அபிஷேக வேளை



CDC வாலிபர் முகாமில் பங்குபெற்ற வாலிப சகோதர சகோதரிகள்.

# ஷாலோம் CDC வாலிபர் முகாம்



வளர்ந்து வரும் ஷாலோம் ஊழியத்தில் தேவன் நமக்கு குஜராத்தில் தந்துள்ள CDC Project–ல் ஹிரோலா மற்றும் ஜெரி கிராமத்திலுள்ள நமது பிள்ளைகளில் 120 வாலிபர்களுக்கு மட்டும் விசேஷித்த வாலிபர் முகாம் 2013 செப்டம்பர் 06–07 ஆகிய இரண்டு நாட்கள் தாகோத்தில் உள்ள CNI Hall–ல் வைத்து நடத்தப்பட்டதில் Project Staff அனைவரும் பங்குபெற்று, பிள்ளைகளை கவனித்துக் கொண்டார்கள். "எனது தீர்மானம் எனது எதிர்காலம்" ("My Decision My Future") என்ற தலைப்பின் கீழ் நடத்தப்பட்ட இந்த வாலிபர் முகாமை சகோதரி.வஹிதா தேவதாஸ் அவர்கள் பொறுப்பெடுத்து நடத்தினார்கள்.

இதன் அடிப்படையில் அபிநயப் பாடல்களைப் பாடி சகோ. ஃப்ராங்க்ளின் அவர்கள் ஆராதனையை நடத்தியதும் வாலிபர்கள் பரவசமடைந்தார்கள். முதல் நாளில் இரட்சிப்பு (பாவத்திலிருந்து விடுதலை), அர்ப்பணிப்பு (இனி பாவம் செய்யாதபடி) என்பதன் அடிப்படையிலும், இரண்டாவது நாள் பரிசுத்த ஜீவன் மற்றும் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் போன்றவற்றைப் பற்றியும் சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள் வழங்கிய விசேஷித்த செய்தியினைக் கேட்ட வாலிபர்கள் அழுது தங்களை ஒப்புக்கொடுத்தது மட்டுமல்லாமல், மறுநாள் ஆவியின் அபிஷேகத்தால் நிறையப்பட்டு பரிசுத்த வாழ்வுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்தனர்.

"திரும்பி வா, தூரம் போகாதே நீ " என்ற தலைப்பின் கீழ் Choreograph நடத்தப்பட்ட பின் Group discussion மூலம் 12 சிறு குழுக்களாகப் பிரித்து வேத வசனங்களை விளக்கி கற்றுக்கொடுக்கப்பட்டது மட்டுமல்லாமல் Scripture Union–இல் இருந்து சகோ. கார்ஃபில்டு மெக்வான் அவர்கள் வந்து 5 மணி நேரம் பாடல், கதை, Puppet Show மற்றும் VCD மூலமாக விசுவாசத்தில் முன்னேறும்படியாகவும், தைரியம், மனஉறுதி, எதை எடுத்தாலும் செய்து முடிக்கும் திறமைகளைப் பற்றியும் கலை நிகழ்ச்சியை நடத்தவே பரவசத்துடன் பார்த்தப் பிள்ளைகள் அதிக உற்சாகமடைந்தார்கள்.

Training Unit Staff எல்லோரும் சேர்ந்து, யோசேப்பின் வாழ்க்கையில் அவன் எடுத்த தீர்மானத்தின்படியே தேவன் அவனை உயர்த்தின விதத்தை நாடகமாக நடத்திக் காண்பித்தார்கள். மேலும் வேதவினாப் போட்டி நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற பிள்ளைகளுக்கு பரிசுகளை வழங்கி உற்சாகப்படுத்தினார்கள். பிள்ளைகள் தங்குவதற்கான இடவசதியும், உணவும் செய்து கொடுக்கப்பட்டது.

கடைசியாக 2–வது நாள் கூட்டத்தில் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பற்றியும், பரிசுத்த வாழ்வைக் குறித்தும் பிள்ளைகள் புரிந்துக்கொள்ளும்படியாக விளக்கி பேசி அபிஷேகத்திற்காக விசேஷித்த ஜெபமும் ஏறெடுக்கப்பட்டதில் பங்கெடுத்த அனைவருமே இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றுக் கொண்டார்கள். கடினமான உள்ளத்துடன் வந்த பிள்ளைகள் கூட தேம்பித் தேம்பி அழுது ஆண்டவரிடத்தில் தங்களை ஒப்புக்கொடுத்தார்கள்.

இவைகளையெல்லாம் பார்த்து, கேட்டு நாங்கள் பரவசமடைந்து இதயத்தின் ஆழத்திலிருந்து தேவனை மகிமைப்படுத்தினோம். இந்த முகாமில் பிள்ளைகள் இரட்சிக்கப்பட்டு அபிஷேகத்தைப் பெற வேண்டும் என்ற வாஞ்சையோடு இருந்தோம். அதை அப்படியே நிறைவேற்றிக் கொடுத்த

தேவனுக்கு ஸ்தோத்திரம்! பங்கெடுத்த 120 பிள்ளைகளும் தங்கள் சாட்சிகளை கைகளினால் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அதை வாசித்துப் பார்த்ததில், 60 பிள்ளைகள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும், 46 பிள்ளைகள் இரட்சிப்பின் அனுபவத்தையும், 4 பிள்ளைகள் விடுதலையையும் உள்ளத்தில் சமாதானத்தையும் பெற்றுக் கொண்டதாகவும் எழுதியிருந்தார்கள். தேவனுக்கே மகிமையுண்டாவதாக!

**அவற்றுள் சில சாட்சிகள்.**

**1. பெயர் : ராஜேஷ் மேடா கிராமம் : ஜெரி, குஜராத்**

நான் வாலிபர் முகாமிற்கு வரும்போது இயேசுவைப் பற்றி ஒன்றுமே தெரியாமல் வந்து சேர்ந்தேன். இந்த முகாமில் இயேசுவைப் பற்றி அதிகமாக அறிந்துக் கொள்ள வாய்ப்பு கிடைத்தது மட்டுமன்றி, **"உன்னுடைய தீர்மானமே உன் எதிர்காலம்"** என்று Banner–ல் எழுதப்பட்டிருந்த கருப்பொருளை வாசித்தவுடன் நான் செய்த பாவங்கள் எல்லாம் எனக்கு நினைவில் வந்ததும் அவற்றை அறிக்கைச் செய்து தேவனிடம் மன்னிப்புக் கேட்டேன். ஜெபவேளையில் நானும் அதிகமாய் ஜெபிக்க ஆரம்பித்தேன். அப்பொழுது யாரோ ஒருவர் என்னிடம் பேசுவது போல உணர்ந்தேன், பின்பு சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள் என் தலையில் கரங்களை வைத்து ஜெபித்தபோது, நான் கீழே விழுந்து விட்டேன். கொஞ்ச நேரத்தில் எழும்பி என்னுடைய இடத்திற்கு வந்து நான் ஜெபித்தபோது, இயேசுவை முதல் முறையாக தரிசனத்தில் பார்த்தேன். அதே நேரத்தில் பரிசுத்த ஆவியில் நிரப்பப்பட்டதால் என் சந்தோஷத்திற்கு அளவேயில்லை. தேவனுக்கே மகிமையுண்டாவதாக!

**2. பெயர் : ஈசாக் கணவா கிராமம் : ஹிரோலா, குஜராத்**

நான் வாலிபர் முகாமிற்கு புறப்பட்டு வந்த நேரம் என் சரீரத்தில் அதிகமான வேதனை இருந்தது. இந்த முகாமில் பங்கெடுத்து ஜெபித்த நேரத்தில் அந்த வேதனைகள் முற்றிலும் மறைய ஆரம்பித்தது. பின்பு எனது மனதில் இயேசுவைக் கூப்பிட வேண்டும் என்று தீர்மானித்து இயேசுவே என் உள்ளத்தில் வாரும் என்று அழைத்தேன். ஆராதனை நடந்துக் கொண்டிருந்த நேரத்தில் நான் எங்கு நிற்கிறேன் என்று கூட தெரியாமல் என்னையே மறந்து ஆராதிக்க ஆரம்பித்தேன். பின்பு சகோதரி.வஹிதா தேவதாஸ் எனது தலையில் கை வைத்து ஜெபித்தபோது, எனது மனம், ஆத்துமா மற்றும் சரீரம் எல்லாவற்றிலும் விடுதலை கிடைத்தது. என்னுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டதை உணர்ந்தேன். பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டதோடு என் உள்ளத்தில் சந்தோஷம் மற்றும் சமாதானத்தையும் பெற்றுக்கொண்டேன்.

**3. பெயர்: சுரேஷ் கணவா கிராமம்: ஹிரோலா,குஜராத்**

நான் 12–ஆம் வகுப்பு படிக்கிறேன். வாலிபர் முகாமில் பங்கெடுத்தபோது, ஆராதனை வேளையில் இயேசுவைப் பற்றி அதிகமாய் நினைவில் வந்தது மட்டுமல்லாமல் வசனங்களும் மனதில் வந்து கொண்டே இருந்ததால் இயேசுவை அதிகமாய் அறிந்து அழுது ஜெபித்தேன். இந்த முகாமில் இயேசுவை அதிகமாய் நேசிக்கிற அனுபவம் கிடைத்ததால் தேவனுடைய ஆசீர்வாதம் என் மேல் இறங்கியது. பின்பு தானியேலைப் பற்றிய செய்தியைக் கேட்டபொழுது, தானியேல் மேல் இருந்த அபிஷேகமும், ஜெபவாழ்க்கையும்தான் அவனை சிங்கத்தின் வாயிலிருந்து காப்பாற்றி, உயர்த்தியது என்று அறிந்து நானும் ஜெபித்தேன். அப்பொழுது ஜெபவேளையில் தானியேல் மேல் இருந்த அபிஷேகம் என் மீதும் இறங்கி, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டேன். ***தேவனுக்கே மகிமை!***

# தேவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள்...



❋ குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வசிக்கும் ஒரு கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்கள் அனைவரும் நமது தலைமுறையில் இரட்சிக்கப்படவும், அவர்கள் வசிக்கும் 7000 கிராமங்களிலும் ஊழியர்கள் மற்றும் சபைகள் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்.

❋ பணித்தளங்களில் ஒவ்வொரு வெள்ளியும் நடைபெற்றுவரும் சுகமளிக்கும் ஆராதனைக்காக, அதில் அநேகர் பங்குபெற்று அற்புதங்களைப் பெற்று தேவனண்டையில் சேர ஜெபியுங்கள்.

❋ தேவ கிருபையினால் தற்போது 3 மாநிலங்களிலுள்ள 25 கிராமங்களில் நடைபெற்று வரும் ஆலயக் கட்டுமானப் பணிகளை தேவன் ஆசீர்வதிக்கவும், அதற்கான தேவைகளை தேவன் சந்தித்து, ஆலயங்கள் பிரதிஷ்டை செய்யப்பட ஜெபியுங்கள்.

❋ Shalom Charity Mission மூலமாக தாங்கப்பட்டு வரும் பீல் ஆதிவாசி மாணவர்களை தேவன் நல்ல ஞானத்தைத் தந்து ஆசீர்வதிக்கவும், அவர்களின் கல்வித் தேவைகளை சந்திக்கவும், ஆதரவாளர்கள் இல்லாத மாணர்களுக்கு ஆதரவாளர்கள் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

❋ உயர்கல்விக் பயின்று வரும் மற்றும் உயர் கல்விக்கா காத்திருக்கும் நமது பீல் ஆதிவாசி மாணவர்களில் 206க்கும் அதிகமானோருக்கு அவர்களின் கல்விக்குத் தக்கவாறு ஒரு மாணவருக்கு வருடத்திற்கு ரூ. 10,000/– (அ) ரூ. 20,000/– (அ) ரூ. 30,000/– தேவைப்படுகிறது. தேவைகள் சந்திக்கப்படவும், ஆதரவாளர்கள் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

❋ இந்த 2013ம் ஆண்டிற்குள் சுமார் 7000ம் பீல் ஏழை ஆதிவாசி விசுவாசிகளுக்கு குஜராத்தி மற்றும் ஹிந்தி மொழிகளில் வேதாகமங்கள் வழங்கப்பட வேண்டும். இதற்கு ஒரு வேதாகமத்திற்கு ஆகும் செலவு ரூ. 100/– ஆகும். 7000 வேதாகமங்களுக்கான தேவைகள் சந்திக்கப்படவும், விசுவாசிகளுக்கு வேதத்தின மூலம் ஒரு பெரிய ஆசீர்வாதத்தினைக் கட்டளையிடவும் ஜெபியுங்கள்.

❋ **பேராயர். தேவதாஸ்** மற்றும் அவர்கள் துணைவியார் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களுக்காகவும் பிள்ளைகளுக்காகவும் விஷேசமாக ஜெபியுங்கள். தேவன் தாமே அவர்களுக்கு தமது ஞானத்தையும், கிருபைகளையும் தந்து ஊழியங்களை நடத்திச் செல்லவும், நல்ல சுகத்தையும், பெலத்தையும், பிரயாணங்களில் பாதுகாவலையும் தேவன் தந்து, விசேஷித்த அபிஷேகத்தின் வல்லமையால் நிரப்பவும் ஜெபியுங்கள். தேவன் பேராயர் குடும்பத்தை பீல் மக்களுக்கு மட்டுமன்றி தேசத்திற்கும் ஆசீர்வாதமாக பயன்படுத்த ஜெபியுங்கள்.

❋ தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலகம், சென்னை மற்றும் மார்த்தாண்டம் கிளை அலுவலகம் போன்ற அலுவலகங்களில் தேவனுடைய ஊழியத்தினை நிறைவேற்றி வரும் நமது சகோதர சகோதரிகளுக்காகவும், மேலும் ஊழியத்தில் தன்னார்வமாய் செயல்பட்டு காணிக்கைகளைச் சேகரித்து அனுப்பும் பிரதிநிதிகளுக்காகவும் பாரத்தோடு ஜெபியுங்கள்.

# பணித்தளங்களில் நடைபெறும் ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்

27.09.13 **ஷாலோம் அற்புதத்தின் நாள் (600 சபைகள்).**

28.09.13 முதல் 29.09.2013 வரை **சகோ. ஜெயசிங் செல்வக்குமார்** (தூத்துக்குடி) அவர்களின் பணித்தள வருகை & ஆலயப் பிரதிஷ்டை

28.09.13 பான்ஸ்வாடா பிராந்திய மூப்பர்களின் கூடுகை, (இராஜஸ்தான்) / ஆண்களுக்கான வாலிபர் முகாம் (இராஜஸ்தான்)

29.09.13 ஆலய பிரதிஷ்டை (இராஜஸ்தான்) / இளம் பெண்களுக்கான வாலிபர் முகாம்

30.09.13 திட்டங்கள், பள்ளி, விடுதி, பணித்தள அலுவலக ஊழியர் கூடுகை

***அக்டோபர் – 2013***

01.10.13 ஊழியக்கார சகோதரிகள் கூடுகை

02.10.13 பணித்தள பள்ளி மற்றும் கம்பேஷன் திட்ட ஊழியர்கள் கூடுகை

05.10.13 ஹிரோலா கம்பேஷன் சிறுவர்கள் தியானம்

06.10.13 மத்தியப்பிரதேச ஷாலோம் மிஷன் ஞாயிறு

07.10.13 மத்தியப்பிரதேச ஷாலோம் ஊழியர்கள் கூடுகை

08.10.13 முதல் 10.10.13 வரை **பாஸ்டர். மோசஸ் ஜெபராஜ்** (சென்னை) அவர்கள் மற்றும் 4 போதகர்களின் பணித்தள வருகை

10.10.13 முதல் 12.10.13 வரை குஜராத், அகமதாபாத்தில் **இயேசு அழைக்கிறார் தீர்க்க தரிசன மாநாடு.** ஷாலோமிலிருந்து 200 ஊழியர்கள் பங்கேற்பு

13.10.13 **ஷாலோம் மிஷன் ஞாயிறு** –குஜராத்

14.10.13 ஷாலோம் சுதேச ஊழியர் கூடுகை – குஜராத்

19.10.13 குஜராத், ஜெரி Compassion சிறுவர் முகாம்

20.10.13 **ஷாலோம் மிஷன் ஞாயிறு**–இராஜஸ்தான் / **சகோ. டென்சிங்** (சென்னை) குடும்பத்தாரின் பணித்தள வருகை & ஆலயப் பிரதிஷ்டை

21.10.13 ஷாலோம் சுதேச ஊழியர் கூடுகை – இராஜஸ்தான்

27.10.13 முதல் 4.11.13 வரை இஸ்ரேல் புனித பயணம்.
இயேசு அழைக்கிறார் ஜெபக் கோபுரம் திறப்பு
**பிஷப். தேவதாஸ் & சகோதரி. வஹிதா தேவதாஸ்** பங்கேற்பு.

18.11.13 முதல் 21.11.13 வரை **ஷாலோம் சுதேச ஊழியர் குடும்பக் கூடுகை,** குஜராத்.

***"என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்"*** *-யோவான். 14:14*

# *தூத்துக்குடி ஷாலோம் தலைமை அலுவலக*
# ஊழிய சகோதரிகளின் பணித்தளப் பார்வை

கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக. தூத்துக்குடி ஷாலோம் தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் சகோதரிகள்; **ஆக்கில்லா, புஷ்ப ரத்தின ஜெபா, எப்சிபா, கோகிலா,** போன்ற நாங்கள் தேவ கிருபையினால் கடந்த 27.7.2013 அன்று நமது பணித்தளங்களை பார்வையிடும்––படியாக குஜராத் சென்றோம். 30.7.2013 அன்று மத்தியப்பிரதேசத்திலுள்ள நமது பணித்தளங்களை பார்வையிடும்படியாக சென்றோம். தெல்சர் என்ற இடத்தில் அமைந்துள்ள நமது தேவாலயத்தை பார்வையிட்டோம். தொடர்ந்து அந்தர்வேலியாவில் உள்ள Compassion project –ஐ பார்வையிட்டபின் மேந்திகேடாவில் உள்ள நெகேமியா குழு கட்டித் தந்த சபையையும், மாண்டலி, ஒஸ்கா, பின்பு தோரண்யா என்ற இடத்தில் உள்ள நமது சபையில் நடந்த கூட்டத்தில் கலந்து கொண்டோம். 200 க்கும் மேற்பட்ட விசுவாசிகள் வந்திருந்தனர். **சகோதரி. எப்சிபா** தேவ செய்தியை அளிக்க **சகோ. சாமுவேல்** அவர்கள் தமிழாக்கம் செய்தார்கள். சொக்குவாடா, ஹரிநகரில் உள்ள மாணவர் விடுதியையும் தேவுகா, வட்டா, ஜாய்னி போன்ற இடங்களுக்குச் சென்று பார்வையிட்டோம்.

31.7.2013 அன்று ராஜஸ்தானிலுள்ள பிஜல்பூருக்கு சென்றுப் பள்ளியையும், விடுதியையும் பார்வையிட்டோம். தொடர்ந்து கும்பூரா சபையில் நடந்த கூட்டத்தில் கலந்து கொண்டு **சகோதரி. ஆக்கில்லா** தேவ செய்தியளிக்க **சகோ. கேரட்** அவர்கள் மொழியாக்கம் செய்தார். சுதேச ஊழியர்களுக்கு நடந்த கூட்டத்தில் கலந்து கொண்டோம். 3 மாநிலங்களிலுமிருந்தும் வந்த 400 க்கும் மேற்பட்ட ஊழியர்கள் கலந்து கொண்டதைப் பார்த்து தேவனை மகிமைப்படுத்தினோம். அதோடு நாங்கள் அனைவரும் எங்கள் சாட்சிகளைப் பகிர்ந்து கொள்ள **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் மொழி பெயர்த்தார்கள். புதிதாக தொடங்கப்பட்ட ஷாரோன் நினைவு மருத்துவமனையைப் பார்வையிட்டோம்.

1.8.2013 அன்று குஜராத்திலுள்ள பணித்தளங்களைப் பார்க்கும் படியாக கர்த்தர் கிருபை செய்தார். ஹிரோலா என்ற இடத்தில் அமைந்த நமது பள்ளிகூடத்தையும், தேவாலயத்தையும் காண கர்த்தர் கிருபை செய்தார். 100 க்கும் மேலான ஆதிவாசி ஏழை பிள்ளைகள் படிக்கின்ற காட்சிகளைப் பார்த்து மெய் சிலிர்த்து போனோம். தொடர்ந்து கோலானா என்ற இடத்தில் உள்ள நமது சபைக்குச் சென்று சபைப் போதகர் **மசூர் கனவா** அவர்களைப் பார்த்துப் பேசினோம். அவருடைய சாட்சி சபை உருவான வரலாறு விசுவாசிகளைப்பற்றிய குறிப்புகள் போன்றவற்றை கேட்டு அறிந்து தேவனை மகிமைப்படுத்தினோம்.

இதைத் அடுத்து பாரேவா என்ற கிராமத்திலுள்ள நமது திருச்சபைக்குச் சென்று போதகர் **ஹவ்சிங் சங்கடா**, அவரது மனைவி **வனிதாபேன்** இருவரையும் சந்தித்து அவர்கள் சாட்சியைக் கேட்டு அறிந்தோம். சபை ஊழியர் மற்றும் விசுவாசிகள் அனைவரும் எங்களை கலாச்சார முறைப்படி வரவேற்றார்கள். இங்கு நடந்த கூட்டத்தில் **சகோதரி. எப்சிபாவும், சகோதரி. ஜெபாவும்** சாட்சி கொடுக்க **சகோ. சாமுவேல்** அவர்கள் மொழியாக்கம் செய்தார்கள். தேவ செய்தியை **சகோதரி. கோகிலா** வழங்கினார்கள். அதனை அடுத்து ஊழியர்களின் மனைவியர்களின் கூட்டத்தில் நாங்கள் கலந்து கொண்டு எங்களுடைய சாட்சியை பகிர **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் மொழியாக்கம் செய்தார்கள்.

மூன்று மாநிலங்களில் உள்ள ஊழியங்களைப் பார்க்க வேண்டுமானால் பல மாதங்களாகும். நாங்கள் பார்த்த ஒரு சில கிராம சபைகளில் ஆதிவாசிகளின் உற்சாகமான ஜெபம் விசுவாசம் எங்களை திருப்திப்படுத்தியது. நமது ஷாலோம் ஊழியம் மிகுந்த தியாகத்தோடு நடைபெறுவதைக் கண்டு தேவனை மகிமைப்படுத்தினோம். இயேசுவை அறியாத ஆதிவாசி ஜனங்கள் ஒவ்வொரு நாளும் இரட்சிக்கப்டுகிறார்கள் என்பதை நேரடியாகக் கண்டு, தொடர்ந்து இவர்களுக்காக ஜெபிக்க நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். குஜராத் சென்று இந்த ஊழியங்களைப் பார்வையிட கிருபை செய்த தேவனைத் துதிக்கிறோம்.

*ஜெபியுங்கள்!* *பங்கு பெறுங்கள்!*

## வாக்குத்தத்த ஆசீர்வாத ஜெபக் கூடுகை

நாள் : **01.10.2013 (செவ்வாய்)**

நேரம் : **காலை 9.30 மணி முதல் 1.00 மணி வரை**

இடம் : **அன்பு பகிர்வு இயக்கம், தலைமை அலுவலகம்**
5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 628 008.

தேவ செய்தி : **Prof. C.S. கிறிஸ்டோபர்,** பாளையங்கோட்டை

## ஷாலோம் மிஷனெரி ஜெபக்கூடுகை

நாள் : *12.10.2013, சனிக்கிழமை*

நேரம் : *மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை*

*இடம் :* **ஷாலோம் கிளை அலுவலகம்,**
M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்)
வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிக்கவும்,
தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.

தொடர்புக்கு: **சகோ. G. செல்வதுரை,** Cell : 94876-89869,
**சகோ. ஜார்ஜ்,** Cell : 98944-78405 **சகோ. கிங்பெர்ட்,** Cell : 94868-64820

## `ôúXôm 24 U¦ úSW Ne¡-j ùRôPo ù_Tm

நாள் : **19.10.2013** (சனிக்கிழமை)



நேரம் : **அதிகாலை 12.00 மணி முதல் மறுநாள் நள்ளிரவு 12.00 மணி வரை (24 மணிநேரம்)**

*நீங்களும் பீல் மக்களுக்காகவும், ஷாலோம் ஊழியத்திற்காகவும் ஏதாவது 1 மணிநேரம் ஜெபிக்க விரும்பினால் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு ஜெபக்குறிப்புகளை அனுப்புகிறோம்.*

சுதேச ஊழியரின் சாட்சி



## போதகர். லால்சிங் கராசியா

குண்டாபேடா ஃபலா, இராஜஸ்தான்

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். எனது பெயர் லால்சிங் கராசியா. நான் இயேசுவை அறியாத பீல் ஆதிவாசி குடும்பத்தைச் சேர்ந்தவன். மிகவும் பாவ பழக்க வழக்கங்களில் அடிமைப்பட்டுக் கிடந்த நாங்கள் குடும்பமாக அசுத்த ஆவிகளையும், விக்கிரகங்களையும் வணங்கி வந்தோம். நோய் ஏதாவது வந்தால் மந்திரவாதிகளை நாடிச் சென்று மந்திரக் கிரியைகளை செய்வோம்.

இந்த சூழ்நிலையில் வாழ்ந்து வந்தபோது என்னுடைய மனைவி சஜன் மிகவும் சுகவீனப்பட்டாள். எங்களுடைய வழக்கத்தின்படி மந்திரவாதிகளை நாடிச் சென்று ரூ.10000 செலவு செய்து ஆடு, கோழி போன்றவற்றைப் பலியிட்டு எந்தவித பயனுமில்லாமல் நோய் நாளுக்கு நாள் அதிகமடைந்ததால் என்னுடைய மனைவி மரிக்கும் தருவாய்க்கு வந்தாள். என்ன செய்வதென்றே தெரியாமல் மிகவும் கலங்கியிருந்த போது, இயேசு கிறிஸ்துவைக் குறித்தும் ஷாலோம் ஊழியர் **சகோ. பாவ்ஜி** அவர்களைக் குறித்தும் கேள்விப்பட்டு ஜெபிக்கும்படியாகச் அவரிடம் சென்றோம்.

ஊழியர் எங்களுக்காக பாரத்தோடு ஜெபித்தவுடன் தேவன் என்னுடைய மனைவிக்கு பூரண சுகத்தைக் கொடுத்தார். தேவன் கொடுத்த இந்த அற்புதத்தைக் கண்டபின் குடும்பமாக இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு ஆலயத்திற்கு தொடர்ந்து செல்ல ஆரம்பித்தோம்.

அதன்பின் குடும்பமாக ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டோம். தேவனுடைய அழைப்பைப் பெற்று ஷாலோம் குறுகிய கால வேதாகமப் பயிற்சி பெற்று, என் சொந்த கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறேன். இந்தக் கிராம மக்கள் முழுவதும் தேவனை அறிந்து கொள்ள வேண்டும் என்பதே என்னுடைய தரிசனம். எனக்காக, ஊழியங்களுக்காக, என்னுடைய குடும்பத்திற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இந்த சுதேச ஊழியரை ஜெபித்துத் தாங்குவோர் : **Pr. L. Joseph, Jesus with Us - Hosur**

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இதுவரையில் 500க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களை எழுப்பி, பயிற்றுவித்து 600க்கும் அதிகமான ஸ்தல சபைகளை ஊருவாக்கியுள்ளோம். இவ்வருடத்தில் 200 புதிய சுதேச ஊழியர்களை எழுப்ப தேவன் கிருபை தருகிறார். குடும்பமாக, சபையாக, குழுவாக மாதம் ரூ. 2000/– ஜெபித்து கொடுத்துத் தாங்க முன் வாருங்கள். பாரத தேசம் எங்கும் வீட்டிற்கு ஒரு நற்செய்திப் பணியாளரை அனுப்புவோம். தேசம் தேவனை அறியட்டும்! அல்லேலூயா!

# பணித்தளங்களில் தேவ அற்புதங்கள்!

## குஜராத் மாநிலம்

**Pr. பாரத் டாமோர்** **தோலாககர்ரா**

வாலுபாய் என்பவருக்கு காய்ச்சல் மற்றும் வாந்தி ஏற்பட்டு மருத்துவரிடம் சென்றும் குணமடையாமல் ஜெபித்த போது தேவன் பூரண சுகம் தந்தார்.

வாந்தி மற்றும் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட லல்லிபேன் என்ற சகோதரிக்காக ஜெபித்த போது தேவன் சுகம் தந்தார்.

**Pr. நவால் M.** புரியா **சலப்பாடா**

தொடர்ந்து கால் வலியினால் பாதிக்கப்பட்டு வந்த காளிபேன் என்ற சகோதரிக்காக ஜெபித்த போது, வலி நீங்கியது.

சீதாபேன் என்ற சகோதரிக்காக ஜெபித்த போது வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு மாறியது.

**Pr. நட்டு F. ராட்டுவா** **லேகாட்**

பாவ்பைபாய் என்பவரின் மகனுக்காக ஜெபித்த போது, வியாதியிலிருந்து பூரண சுகம் கிடைத்தது.

**Pr. மன்னு P. பாபோர்** **சனசர்**

5 வருடங்களாக சரீர வலியினால் கஷ்டப்பட்டு வந்த ரிவலிபேன் என்ற சகோதரிக்காக ஜெபித்த போது, நல்ல சுகம் கிடைத்தது.

**Pr. மதியா M. சங்கடா** **தாஸ்லா**

சாத்தானின் பிடியில் கஷ்டப்பட்டு வந்த தாவரியாபாய் என்பவருக்காக ஜெபித்த போது பூரண விடுதலை கிடைத்தது.

## இராஜஸ்தான் மாநிலம்

**Pr. கன்திலால் D. டாமோர்** **ரத்தன்புரா**

பத்து வருடங்களாக வயிற்று வேதனையால் அவதிப்பட்டு வந்த துர்காபேன் என்ற சகோதரிக்காக ஜெபித்த போது பூரண சுகம் கிடைத்தது.

துலிபேன் என்ற சகோதரருக்கு பைத்தியம் பிடித்து, குணமடைய ரூ.30,000 வரை செலவு செய்தும் எந்த பயனும் இல்லாமல் கடைசியாக இவருக்காக ஜெபித்த போது தேவன் பூரண சுகம் கொடுத்தார்.

**Pr. கேசவியால்D. மச்வானா** **கமிர்புரா**

சங்கர்லால் என்ற சகோதரருக்கு வயிற்றுப்போக்கு ஏற்பட்டு அவதிப்பட்ட நேரத்தில் இவருக்காக ஜெபித்த போது தேவன் நல்ல சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. விமல் கதிஜா** **பட்டேலியா**

அணில்பாய் என்ற சகோதரர் அதிக வியாதிப்பட்டு பாதிக்கப்பட்ட நிலையில் இவருக்காக ஜெபித்த போது, தேவன் பூரண சுகம் தந்தார்.

**Pr. தினேஷ் சந்திர ஹீவர்** **சோக்புரா**

மஞ்சுளாபேன் என்ற சகோதரி அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டு சிரமப்பட்ட வேளையில் இவருக்காக ஜெபித்த போது தேவன் விடுதலையைக் கொடுத்தார்.

**Pr. சுக்லால் M. டாமோர்** **கேரியா**

ரமன்லால் பாய் என்பவரின் குடும்பத்தில் காணப்பட்ட தீராத நோய் மாறும்படி ஜெபித்த போது தேவன் விடுதலை தந்தார்.

**Pr. பதமிலால் D. பாரியா** **கோடா**

வாந்தி மற்றும் காய்ச்சலினால் கஷ்டப்பட்ட ரியாபேன் என்ற சகோதரிக்கு ஜெபித்தபோது தேவன் பூரண சுகத்தைக் கொடுத்தார்.

## மத்தியப்பிரதேச மாநிலம்

**Pr. தும்சிங் M.பாரியா** **நவகாம்**

சாத்தான் பிடியில் அகப்பட்டு கஷ்டப்பட்டு வந்த சாரதா என்ற சகோதரிக்காக ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**Pr. சந்து B.பார்மர்** **சாந்தா**

சுமாபேன் என்ற சகோதரருக்கு சரீரத்தில் எரிச்சல் ஏற்பட்டு வந்த சமயத்தில் இவருக்காக ஜெபித்த போது தேவன் பூரண சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. காளியா L. பாபோர்** **பார்வடா**

சகோதரர் பக்தூர்சிங்கின் மகன் 10 மாதங்களுக்கு மேல் வயிற்று வலியினால் அடிக்கடி கஷ்டப்பட்டு வந்தார். இவருக்காக ஜெபித்த போது தேவன் பூரண சுகம் தந்தார்.

மூன்று மாதங்களாக துர்காபேன் என்ற சகோதரி வயிற்று வலியினால் கஷ்டப்பட்டு வந்தார். பல்வேறு மருந்துகள் சாப்பிட்டும் பலனில்லாமல் விசுவாசத்தோடு ஜெபிக்கவே தேவன் பூரண சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. கிம்ராஜ் J. பாபேரியா** **கேடி**

போகலிபேன் என்ற சகோதரி சாத்தான் பிடியினால் மிகவும் கஷ்டப்பட்டு வந்தார். இவருக்காக ஜெபிக்கவே தேவன் பூரண விடுதலை தந்தார். அசுத்த ஆவியினால் காவரிபேன் சகோதரியின் சரீரம் கட்டப்பட்டு விடுதலையின்றி தவித்தார். இவருக்காக ஜெபித்தபோது தேவன் அற்புத சுகம் தந்தார்.

**Pr. வால்சிங் A. சொஹாரியா** **சூளியா**


பூர்சிங் பாய் என்ற சகோதரருக்கு வயிற்றில் பிரச்சனை ஏற்பட்டு ஆப்பரேஷன் செய்ய வேண்டும் என்று டாக்டர்கள் கூறினார்கள். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது ஆப்பரேஷன் செய்யாமல் தேவன் சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. சென்சிங் D.வாசுனியா** **கேடா சலேஜர்**

சகோதரி காலிபேனின் மகளுக்கு தீராத காய்ச்சலில் இருந்து தேவன் பூரண சுகம் தந்தார். மான்சிங் என்பவரை பாம்பு கடித்துவிட்டது. ஜெபம் கேட்டு தேவன் பூரண சுகம் கொடுத்தார்.

மிஷனெரி முன்னோடிகள்

# G ª Lôoû UdúLp AmûUVôo



1867ஆம் ஆண்டு டிசம்பர் 16ல் டேவிட் கார்மைக்கல் – காத்ரீன் தம்பதியினருக்கு 7 குழந்தைகளில் மூத்த மகளாக எமி பியட்ரீஸ் கார்மைக்கல் பிறந்தார். அவர்கள் வீட்டிற்கு விருந்திற்கு வந்த ஒரு அம்மையார் சிறுமி ஏமியின் சிரசின் மேல் கைகளை வைத்து **“இக்குழந்தை பிற்காலத்தில் அதிசயச் செயல்களைச் செய்வாள்”** என்று கூறினார். அவருக்கு 4 தம்பிகளும் 2 தங்கைகளும் உண்டு.

அவரது தம்பிகளில் ஒருவன் ஒருநாள் தவளையொன்றை இம்சிக்கிறதைக் கண்டார். அக்காட்சியினால் அவர் வருத்தமடைந்தார். ஒருநாள் வீட்டிற்குப் பிச்சைக்காரன் ஒருவன் வந்தான். அவனது உடை கிழிந்து கந்தலாய் தொங்கியது. இதைப்பார்த்த எமி அவன்மேல் பரிதாபம் கொண்டு பட்டாடையொன்றைக் கொடுத்துவிட்டாள். இப்படி சிறு வயதிலிருந்தே இரக்கம் கொண்டு அன்பரைப் போல மனதுருக்கம் நிறைந்தவராய் விளங்கினார். அவரது 18வது வயதில் அவரது தந்தை பரமனடி சேர்ந்தார்.

வட அயர்லாந்தின் பெல்பாஸ்டு பட்டணத்தில் மில்லில் வேலை செய்யும் பெண்களுக்கு மாலை தோறும் அப்பட்டணத்தின் ஆலயத்தில் கூட்டி கிராமப் பள்ளி ஒன்றை நடத்தினார். இதினால் சிலர் துன்மார்க்க ஜீவியத்திலிருந்து விடுபட்டனர். அவர் அவ்வாறு நடத்திய கூட்டத்திற்கு **“அன்பின் அழைப்பு”** என பெயரிட்டு அநேகப் பெண்கள் ஆத்ம மீட்படைய உதவினார். பெல்பாஸ்ட் நகரத்தை விட்டு காத்ரீன் அம்மையார் தன் பிள்ளைகளோடு மான்செஸ்டர் நகருக்குச் சென்றார். அங்கும் தொழிற்சாலைப் பெண்களுக்கு **“அன்பின் அழைப்பு”** ஊழியத்தை எமி அம்மையார் தொடர்ந்தார். ராபர்ட் உல்சன் என்னும் பெரியவர் எமியாருக்குத் தந்தை போல் இருந்தார். அவரின் அரிய போதனையாலும் வழிகாட்டுதலாலும் எமி தன் ஆன்மீக வாழ்வையும், சேவையையும் நன்கு கற்றார். எமி கார்மைக்கல் அம்மையாருக்கு வெளிநாடு செல்லவேண்டும் என்ற தெய்வ சித்தம் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டது.

1893 ஆம் ஆண்டு அம்மையார் ஜப்பான் போவதற்காக கப்பல் ஏறினார். ஜப்பானில் 15 மாதங்களாக ஊழியம் செய்தார். அநேக வாலிபர்கள் ஆன்மீக சுகம் பெற்றதோடு, சிலர் அசுத்த ஆவியின் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டனர். அம்மையாரின் அயராத ஊழியத்தினால் அம்மையாருக்கு உடல் நலம் குன்றியது. ஜப்பான் நாட்டைவிட்டு வேறு நாட்டிற்குச் சென்று இளைப்பாற ஆலோசனை வைத்தியர்களால் கூறப்பட்டது. அவர் ஜப்பானிலிருந்து சீனா சென்று அங்கிருந்து கொழும்பு துறைமுகம் வந்தடைந்தார். அவரது சிநேகிதியின் வீட்டில் தங்கி சிறப்பான கூட்டங்களை நடத்தினார். அந்தக் கூட்டங்களில் ஒன்றில் மனம் நொந்து போன ஒரு பெண் கலந்து கொண்டு இரட்சிப்பின் சந்தோஷமும் வாழ்க்கையில் நிம்மதியும் பெற்றார். அவர் இங்கிலாந்து சென்று தன் தாயாரையும், மகரிஷி என்று அழைக்கப்பட்ட பெரியவரையும் சந்தித்தார்.

1895 இல் பெங்களூரிலிருந்து ஒரு சிநேகிதி அம்மையாரை பெங்களூருக்கு வருமாறு கடிதம் எழுதினார். அவர்களும் பம்பாய் துறைமுகத்திற்கு வந்து சென்னை வந்து, அங்கிருந்து பெங்களூருக்குச் சென்றார். அங்கு தன் சிநேகிதியின் வீட்டில் படுத்த படுக்கையானார். அங்கு தமிழ் கற்றுக் கொண்டார். அங்குள்ள தலைமை மிஷனெரி அம்மையாரை திருநெல்வேலிக்கு அனுப்பி அங்கு தமிழ் கற்க உதவினார். வித்துவான் கிருஷ்ண பிள்ளையவர்களும் அம்மையாருக்கு தமிழ் ஆசானாக இருந்தார். உவாக்கர் ஐயரும் அவரது மனைவியாரும் தங்களுடன் கிராம ஊழியம் செய்ய விரும்பினர். திருநெல்வேலி மாவட்டம் அம்மையாரை மிகவும் கவர்ந்தது. ஆகையால் அவர் தம் உணவையும் தமிழரைப் போல மாற்றினார். திருவைகுண்டம் தாலுகா பண்ணைவிளை என்னும் கிராமம் அம்மையாரின் தலைமை இருப்பிடமாக இருந்தது. அநேக பெண்கள் அம்மையாரின் தோழிகளாயினர். அவர்கள் தங்கள் வீட்டைவிட்டு அம்மையாருடன் தங்க துணிவுற்றனர். பண்ணைவிளையில் அம்மையாரால் உருவாக்கப்பட்ட சிறிய கூட்டத்தை நட்சத்திரக் கூட்டத்தார் என்று மக்கள் அழைத்தனர்.

தாமஸ் உவாக்கர் ஐயர் 1885ம் ஆண்டு திருநெல்வேலி வந்தார். 23 ஆண்டுகள் திருநெல்வேலி தமிழ் மக்களுக்காக உழைத்தார். தமது இறுதி 12 ஆண்டுகளில் 6 ஆண்டுகள் பண்ணைவிளையிலும் 6 ஆண்டுகள் டோனாவூரிலும் இறைப்பணி செய்தார். அவர்களோடு அம்மையாரும் சேர்ந்து அன்பரின் சேவையை நிறைவேற்றினர். டோனாவூர் பகுதியில் தேவதாசிகளாக்கப்பட்ட அநேக பெண்களை மீட்டு தம் இல்லத்தில் தம் பாதுகாப்பில் அம்மையார் வைத்தார்கள்.

திருநெல்வேலியில் கீழ்ப்பகுதியில் ஒரு கிராமத்தில் சிவ பக்தர் ஒருவர் தம் வீட்டில் சிறு குழந்தைகளை தம் வசம் வைத்துப் பராமரித்து வந்தார். அதில் நட்சத்திரம் என்ற ஒரு சிறு பெண் இருந்தாள். அவள் சிவன் என்னைப் படைத்தாரா? அப்படியானால் எனது துஷ்டத்தனத்தை மாற்றும் வல்லமை அவருக்கு உண்டா? என்ற கேள்விகளைத் தன் தகப்பனிடம் கேட்டாள். அவர் பதில் ஒன்றும் சொல்லவில்லை. அவள் ஜீவனுள்ள தேவன் **“இயேசு”** என்று அம்மையார் மூலம் அறிந்து, அம்மையார் வசம் சேர்ந்தாள். அவள் அம்மையாரின் வலதுகரமாக டோனாவூர் குடும்பத்தில் விளங்கினாள். அதன்பின் அக்கூட்டம் நட்சத்திரக் கூட்டம் என்றழைக்கப்பட்டது. தென் இந்தியாவின் பல இடங்களிலிருந்தும் பெண் குழந்தைகளை மீட்டுவந்து டோனாவூர் நட்சத்திரக் கூட்டத்தில் சேர்த்தார்கள். ஒரு நாள் அம்மையார் ஒரு குளத்தில் அழகான தாமரை மொட்டுகளைப் பார்த்தார்கள். அதைக் கண்ட மாத்திரத்தில் ஆசையோடு குளத்தில் இறங்கி பறிக்க முயன்றார்கள். அப்பொழுது கோயில் பூஜாரி தாமரை மொட்டுகள் கோவிலுக்குரியது இதைப் பறிக்க உங்களுக்கு உரிமை கிடையாது என்று தடுத்துவிட்டார். அம்மையார் துக்கத்துடன் சென்றார். ஆனால் அவர்களுக்குத் தெரியாது, தான் அழகும் மணமும் நிறைந்த தாமரை மொட்டுகளைப் போன்ற பெண் குழந்தைகளை டோனாவூர் இல்லத்தில் சேர்த்து நல்வாழ்வு அளிப்போமென்று. பொன்னம்மாள் என்ற பெண், அம்மையாருக்கு வலது கரமாயிருந்து சிசுக்களைப் பராமரிப்பதில் தன்னலமற்ற சேவை செய்தார். டோனாவூர் இல்லத்தில்

500க்கும் அதிகமானோர் இருந்தபடியால் அது அம்மையாரை அதிக உற்சாகப்படுத்தியது. டோனாவூர் குடும்பத்தில் கடவுளின் அன்பு வெளிப்பட்டது. திருநெல்வேலி மக்கள் அம்மையாரை **"காருண்யம்மாள்"** என்று அன்புடன் அழைத்தனர்.

ஒரு விதவைப் பெண் தன் 9 வது வயது மகளுடன் நட்சத்திரக் கூட்டத்தில் வந்து சேர்ந்தாள். தன் மகளை அம்மையாரின் பாதுகாப்பில் விட்டுவிட்டு தன் வீட்டிற்குச் சென்றாள். தன் குடும்பத்தாரின் ஆலோசனையைக் கேட்டு தன் மகளை அம்மையாரிடமிருந்து பிரிக்க முற்பட்டாள். அம்மையாருக்கு அந்த மகளைப் பிரிய விருப்பமில்லை. இதனால் அம்மையார் மீது வழக்குத் தொடரப்பட்டது. அம்மையாருக்குக் கடும் எதிர்ப்பு மக்களிடையே கிளம்பியது. ஆனால் கர்த்தர் வழக்கில் வெற்றியைத் தந்து அம்மையாருக்குச் சாதகமாக தீர்ப்புத் தந்தார். அதன்பின் பெண்கள் வசித்த ஸ்தலத்தை சுற்றி ஒரு மதிலைக் கட்ட முயற்சித்தபோது ஒரு வக்கீல் அதை எதிர்த்து நோட்டீஸ் அனுப்பினார். அதிலும் இறுதியாக அம்மையாருக்குச் சாதகமாகவே முடிந்தது. இதற்கிடையில் அம்மையாரின் வலது கரமாயிருந்து சேவை செய்த பொன்னம்மாள் விண்ணுலகம் சென்றார். இந்த இழப்பையும் அம்மையார் அமைதியாகத் தாங்கிக் கொண்டார். பிரீதி அம்மாள் என்ற இங்கிலாந்து தேசத்து ஒரு நர்ஸ் டோனாவூர் நட்சத்திரக் கூட்டத்தில் வந்து சேர்ந்தார். அவர்களின் வருகையால் அம்மையார் உற்சாகமடைந்தார்கள். ராகேல் என்ற அம்மையார் சமையலுக்குரிய அனைத்துக் காரியங்களையும் பெறுப்பாய் கவனித்து வந்தார். இவ்வாறு ஒவ்வொரு சமயத்திலும் தேவைகளுக்கேற்ப தகுந்த நபர்களை தேவனே அம்மையாருக்குத் தந்திருந்தார்.

குழந்தைகளுக்குள்ளே மாணிக்கம் போல் விளங்கியவர் இந்திர நிலா இசையென்றால் இந்திர நிலா அந்த இனிமையில் மூழ்கி விடுவாள். அப்பொழுது அவள் கண்களில் ஒரு தெய்வீக ஒளி மிளிரும். ஒரு நாள் அவள் அருகில் இருந்த இசைப்பெட்டியை சுட்டிக்காட்டினாா். குழந்தைகளை கவனிக்கும் அருளாய் என்ற பெண் அதை அவளிடம் கொடுத்த போது தானே அதைச் சுழற்றி விட்டு இசை மீட்டச்செய்தாள் அந்நேரத்தில் அவள் மேல் படர்ந்த தெய்வீக ஒளியைக் கண்டாள் அருளாயி. அருளாயியின் முகத்தில் தேங்கியிருந்த சோகத்தைக் கண்ட குழந்தை அருளாய் முத்தமிடுவதற்காகத் தன் பிஞ்சுக் கரத்தை நீட்டினாள். அவள் முகத்தைத்தட்டிக் கொடுத்தாள், அதற்குள் களைத்துப் போனவள் கண்களை மூடி உறக்கத்தில் ஆழ்ந்தாள் கடவுளுடைய தூதன் அவள் **"அம்மா"** என்று சொல்லி முடிக்கவும் அவளை கையிலே ஏந்திக் கொண்டு போய் கடவுளின் திருக்கரத்தில் வைத்தான். அன்று ஜனவரி 6 ஒவ்வொரு மாதமும் 6 ஆம் நாள் ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்கும் குழந்தைகள் எங்கிருந்தாலும் அவர்களுக்கான ஜெப நாளாக டோனாவூர் ஐக்கியத்தில் அம்மையார் நிரந்தரமாக ஏற்படுத்தினார். அது இன்றும் கடைபிடிக்கப்படுகிறது.

தேவதாசி முறையில் விற்கப்பட்ட பெண் குழந்தைகளை ஆலயங்களில் தடாகங்களிலுள்ள தாமரை மொட்டுக்களாக அம்மாவின் கண்கள் பார்த்தன. இவர்கள் தவிர குடும்ப சூழ்நிலை காரணமாக படுகுழியில் தள்ளப்பட இருந்த பெண் குழந்தைகளை மீட்டு டோனாவூர் கொண்டு

வந்து அவர்களை அல்லி மலர்களாக மலர அம்மையார் கண்டார்கள். அல்லியும் தாமரையும் ஒரே தடாகத்தில் பூத்து நிற்பது போல் டோனவூர் குழந்தைகள் ஒருவருக்கொருவர் பேதமின்றி ஒரே குடும்பத்தினராக வளர்ந்தனர், வாழ்ந்தனர். அன்னை 'கத்ரீன்' அவர்கள் அம்மையாரை டோனாவூரில் வந்து பார்த்தார்கள். ஒரு ஆண்டுக்கு மேல் தங்கி மகளுக்கு ஆதரவாயிருந்தார். அன்னை காத்ரீன் நாடு திரும்பிய பின்னர் **"துணுக்குகள்"** என்ற சுற்றறிக்கை ஒன்றை தம் நாட்டின் மக்களுக்கு அனுப்பினார்கள். அதில் டோனாவூர் ஊழியத்தின் தேவைகளை அநேகருக்கு தெரிவித்தார்கள். இதனால் அநேகர் அம்மையாரின் தன்னலமற்ற ஊழியத்திற்கு பேராதரவை நல்கினர்.

பெண் மக்களை போல் நாடக கம்பெனிக்கு விற்கப்படும் ஆண் குழந்தைகளைப் பற்றி அம்மாவுக்கு பாரம் ஏற்பட்டது. முதல் முறையாக 1918 ஆம் ஆண்டு ஜனவரி 16 ல் ஒரு ஆண் குழந்தை டோனாவூர் ஐக்கியத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. டோனாவூர் ஐக்கியத்தின் அடிப்படை ஜெபம் தான். நரைக்காடு என்ற எழில் மிகு இடம் டோனாவூர் ஐக்கியத்திற்குக் கிடைத்தது. அங்கு தங்கி கட்டிட வேலை மேற்பார்வை செய்து கொண்டிருந்த போது தான் அம்மையார் செம்புலிங்கம் மற்றும் அவனது நண்பர் காசியையும் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. அவர்கள் இருவரையும் அம்மையார் கிறிஸ்துவுக்குள் வழி நடத்தினார்கள். செம்புலிங்கம் பணக்காரரிடம் கொள்ளையடித்து ஏழைகளுக்கு உதவுபவன். செம்புலிங்கத்தை பிடித்த போலீசார் அவனை துன்பப்படுத்தினர். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான். சிறையில் அவனைப் பலமுறை அம்மையார் பார்த்து வந்தார்கள். செம்புலிங்கத்திற்கு ஜெபமணி என்று ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. செம்புலிங்கம் சிறையில் இருந்து தப்பி ஓடினான். ஆனால் அவனை போலீஸார் மீண்டும் பிடித்து கொடூரமாக கொன்றார்கள்.

1931 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் நாள் களக்காடு வீட்டிற்குச் சென்றிருந்த போது எதிர்பாராத விதமாக ஒரு குழியில் கால் வைத்ததினால் அம்மையாரின் கால் முறிந்து விட்டது. அது முதல் படுத்தபடுக்கையானார். அந்த இன்னலுற்ற காலத்திலும் காலத்தை வீணாகக் கழிக்காமல் தினசரி **"மன்னா"** என்ற ஒவ்வொரு நாளும் ஒரு அருளுரை அடங்கிய கடிதத்தை எழுதினார்கள். மேலும் பல நூல்களை எழுதினார்கள். 20 ஆண்டுகள் படுத்த படுக்கையில் இருந்தாலும் அம்மையார் எப்பொழுதும் புன்முறுவலோடு காணப்படுவார்கள். பல ஆயிரம் அநாதைப் பிள்ளைகளை வளர்த்த தாயாக விளங்கினார்கள்.

ஜனவரி 18, 1951 ஆம் ஆண்டில் அம்மா தமது 85வது வயதில் நேசரின் கரத்தினுள் அடைக்கலம் பெறுவதற்காக விண்ணுலகம் ஏகினார். அம்மாவின் திரு உடல் கடவுளுடைய தோட்டம் என்று அழைக்கப்படும் இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது. ஆயிரம் ஆயிரமான அம்மையாரின் குழந்தைகள், இல்லை – இல்லை, தாமரை மொட்டுகள் இன்பக் குரலில் இனிய பாடல்கள் முழங்க டோனாவூரில் இருந்து விடைபெற்ற அம்மையார் பரம எருசலேம் போய்ச் சேர்ந்தனர்.



# ஷாலோம் - வேத வினாப் போட்டி 7

**பதில் எழுதுக :**

1. எது சத்திய நகரம் என்று அழைக்கப்படும்?
2. பார்வோன் யாசேப்புக்குக் கொடுத்த பெயர் என்ன?
3. பெண் மான்களை ஈனும்படி செய்து, காடுகளை வெளியாக்குவது எது?
4. எது நல்ல ஔஷதம்?
5. சபைக்குப் பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறவன் யார்?
6. எந்த மனுஷன் செத்தவர்களின் கூட்டத்தில் தாபரிப்பான்?
7. நிலக்கீல் உண்டாகும் கேணிகள் எங்கு இருந்தது?
8. இவன் சீரிய ராஜாவின் படைத்–தலைவன். அவன் யார்?
9. எலியாவின் கைகளுக்குத் தண்ணீர் வார்த்தவன் யாருடைய குமாரன்?
10. கர்த்தர் என்றென்றைக்கும் சினம் வைக்கிற ஜனம் எது?

**வேதவினாப் போட்டியில் பங்கு பெறும் வாசகர்களுக்கான நிபந்தனைகள் :**

1. விடைகள் யாவும் தகுந்த வேத ஆதாரத்துடன் இருக்க வேண்டும்.
2. பதில்களை மட்டும் எழுதினால் போதும்.
3. பரிசு பெறுபவர் ஒன்றுக்கு மேற்பட்டவராக இருப்பின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர்.
4. விடைகளை எழுதும் போது தவறாமல் உங்கள் விலாசம், போன் நம்பர் போன்றவற்றையும் சேர்த்து எழுதவும்.
5. பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : **15.10.2013**

**கடந்த மாத போட்டிக்கான சரியான விடைகள் :**

1. உசியா ராஜா. (2 நாளா. 26 : 21) (அ) அசரியா ராஜா (2 இராஜா. 15 : 1,5)
2. கீரியாத் அர்பா (நியா. 1 : 10)
3. ஆயலோன் பள்ளத்தாக்கு (யோசு. 10:12)
4. கொப்பேர் மரம் (ஆதி. 6:14)
5. நிம்ரோத் (ஆதி. 10:9)
6. இரத்தப்பிரியனையும், சூதுள்ள மனுஷனையும் (சங். 5:6)
7. செவி (யோபு 34:3)
8. பெயர்செபா (2 இராஜா. 12:1)
9. நீதிமானுடைய வேர் (நீதி. 12:12)
10. ஆசீரியன் (ஏசாயா 10:5)

**கடந்த மாத வேத வினாப் போட்டி 6–ல் சரியான விடையினை தகுந்த நேரத்திற்குள் எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்றவர்கள்.**

1. **Sis.** லில்லி டேவிட், தூத்துக்குடி. 2. **Bro.** பால்ராஜ் டேவிட், முள்ளக்காடு.
3. **Dr.** பிரைசி, சென்னை

**பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி**

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468, Cell : 9345675468

## காணிக்கை அனுப்பும் வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை பெற்றுக் கொள்ளுங்கள்.
- காணிக்கைகளை M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை அனுப்பலாம்.
- உங்களது வங்கிக் கணக்கில், Net Transfer வசதி இருந்தால் Net Transfer மூலமாகவும் காணிக்கைகளை அனுப்பலாம்.
- **www.shalommission.in** இணைய தளத்தின் மூலமாகவும் காணிக்கைகளை அனுப்பலாம்.

***நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகளில்***
***எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.***

வங்கிக் கணக்கின் பெயர் : **Sharing Love Mission**
Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

AXIS BANK
**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

ICICI Bank
**A/C. No. 613901112799**
**(IFS Code : ICIC0006139)**

*குழந்தை ஆதரவுத் தொகை மற்றும் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப,*

வங்கிக் கணக்கின் பெயர் : **SHALOM CHARITY MISSION**
**Axis** வங்கிக் கணக்கு எண் : **105010100096779 - Tuticorin Branch**
**TMB** வங்கிக் கணக்கு எண் : **174100710400061 - Tiruchendur Road Branch - Tuticorin**

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் காணிக்கை செலுத்தியபின், உடனடியாக இந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை எங்களுக்குத் தெரிவியுங்கள்.

## நாட்டு நடப்புச் செய்திகள்....

விலங்கினங்களிடம் நாம் இதுவரை கண்டறியாத லட்சக்கணக்கான கிருமி வகைகள் காணப்படுவதாக புதிய ஆய்வு ஒன்று கூறியுள்ளது. மனிதர்களைப் பாதிக்கும் பெரும்பாலான நோய்க் கிருமிகள் விலங்குகளிடத்திலிருந்து வந்ததே என்பது குறிப்பிடத்தக்கது. இதுவரை நாம் அறிந்திராத புதிய அறுபது வகையான கிருமிகள் இருக்கக்கூடிய வௌவால் இனத்தை அமெரிக்க மற்றும் வங்கதேச விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். மற்ற விலங்கினங்களிலும் 3,25,000 வகையான நோய்க் கிருமிகள் உள்ளதாக விஞ்ஞானிகள் கணக்கிட்டுள்ளனர்.

---

செவ்வாய் கிரகத்தில் குடியேற **"மார்ஸ் ஒன்"** என்ற திட்டத்தின் மூலம் அடுத்த 10 ஆண்டுகளில் ஒரு காலனியாக நிறுவப்பட திட்டமிடப்பட்டு வருகிறது. அங்கே செல்ல ஆர்வமுள்ளவர்கள் ஒரு வழி பயணத்திற்கான பதிவைச் செய்து வருகிறார்கள். இதில் இந்தியர்கள் மட்டும் 8,000 பேர் இதுவரை பதிவு செய்துள்ளனர்.

---

மும்பையிலுள்ள கடற்படைத் தளத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த நீர்மூழ்கிக் கப்பலொன்று வெடித்து தீப்பற்றியது. இந்தக் கப்பலில் கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் இரண்டு வெடிப்புகள் நிகழ்ந்த சமயத்தில் அதற்குள் சிப்பந்திகள் 18 பேர் இருந்ததாகக் கூறப்படுகிறது. கடற்படையை நவீனப்படுத்தும் இந்தியாவின் திட்டத்திற்கு இந்த நீர்மூழ்கிக் கப்பலின் இழப்பு பெரிய பின்னடைவை ஏற்படுத்தும் என செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

---

அணு ஆயுதத்தைக் கொண்டு செல்லக் கூடிய இரண்டாவது ஏவுகணை ஒன்றை வெற்றிகரமாக பரிசோதித்ததாக இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது. சீனாவின் பீஜிங் மற்றும் ஐரோப்பாவின் பெரும்பாலான பகுதிகள் வரை சென்று தாக்கக்கூடியதாக இந்த ஏவுகணைச் சோதனை செய்யப்பட்டுள்ளது. ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்த ஒரு தீவில் இருந்து இந்த அக்னி–5 என்னும் ஏவுகணை ஏவப்பட்டது. நன்றி : www.bbc.co.uk

## எங்களுடன் தொடர்பு கொள்ள


தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Sharing Love Mission
Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

ஷாலோம் கிராம ஆலயம்



## டிடியா தேவ் (காஸ்லா) இராஜஸ்தான்

பான்ஸ்வாடா மாவட்டம், குசல்கட் தாலுகாவில் காஸ்லா என்ற பகுதியில் இந்த டிடியாதேவ் கிராமம் அமைந்துள்ளது. இந்த கிராமத்தைச் சேர்ந்தவர்தான் சகோ. காத்து சாரேல். இவருடைய தகப்பனார் ஊர் தலைவராவார். பணத்திற்கு எந்த குறைவும் கிடையாது. மூதாதையர்களின் ஆவிகளை வணங்கி பூஜைகளை செய்பவர்கள். காத்து சாரேல் 2004 ஆம் ஆண்டு உடல் வீக்கம் ஏற்பட்டு மிகவும் சுகவீனமடைந்தார். இவர் தனது நோய் குணமாக பூஜைகள் செய்தும் பலிகளைச் செலுத்தியும் வந்தார். இப்படியாக பல நாட்களாக வேதனைப்பட்டு, பூஜாரிகளிடமும், மருத்துவரிடமும் சென்று ரூ. 50 ஆயிரம் செலவு செய்தும் கூட எந்தப் பலனுமில்லை.

மறுபடியும் ஒரு முறை பூஜை செய்வதற்காகவும் தனது அக்காவை பார்ப்பதற்காகவும் பாடலா காட்டாரா என்ற கிராமத்திற்குச் சென்றார். போகும் வழியில் அந்த கிராமத்தில் ஷாலோம் மூலமாக கட்டப்பட்டிருந்த ஆலயத்தில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் நடந்ததைப் பார்த்து அந்த இடத்தில் நின்று இவரும், இவரது மனைவியும் முழு செய்தியையும் கேட்டார்கள். கூட்டம் முடிந்தபின் ஊழியக்காரரிடத்தில் சென்று தனக்காக ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டார். ஜெபத்தின் மூலம் தேவன் பூரண சுகம் கொடுத்தார்.

பின்பு இரண்டு வருடம் அந்த சபையின் விசுவாசியாக இருந்து ஆலயத்துக்கு சென்றார். பின்பு ஊழியம் செய்ய வேண்டும் என்ற பாரம் ஏற்படவே, ஊழியருக்கான பயிற்சியில் பங்குபெற்று, அபிஷேகம் பெற்றார். இவர் இயேசுவை ஏற்றுக்கொண்டவுடன், இவரது தகப்பனார் இவரை வீட்டை விட்டு அனுப்பி விட்டார். ஊருக்கு ஒதுக்குப்புறமாக ஒரு குடிசையில் வாழ்ந்து வந்த இவர் அங்கு தான் சபையை ஆரம்பித்தார். பின்பு 2007–ல் காஸ்லாவிலுள்ள தனது வீட்டில் ஆராதனை நடத்த ஆரம்பித்தார். விசுவாசிகளின் எண்ணிக்கை அதிகரிக்க வீட்டில் இருந்து ஆராதிக்க இடம் வசதியில்லை. வீட்டில் இடம் பற்றாக்குறையானதால், தனது சொந்த நிலத்தை தியாகத்துடன் ஆலயம் கட்டும்படியாகத் தந்தார்.

அந்த இடத்தில் 40'x18' அளவில் **ரூ. 1,60,000/- மதிப்பில்** இந்த ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு 15.09.2013 அன்று பேராயர். V. தேவதாஸ் அவர்கள் ஜெபிக்க, சகோ. பால் எபநேசர் அவர்கள் பிரதிஷ்டை செய்தார்கள். இந்த கிராம ஆலயத்திற்கு, சத்தியமங்கலத்தைச் சேர்ந்த **சகோ. பால் எபநேசர்** அவர்கள் குடும்பத்தின் சார்பில் ரூ. 1 இலட்சம் வழங்கப்பட்டது.

**ரூ. 2 இலட்சம் மதிப்பில் அல்லது ரூ. 1 இலட்சம் மதிப்பில் இந்த 2013ம் ஆண்டிற்குள் 84 ஆலயங்களைக் கட்டிக் கொடுக்க முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!!**

# வாழ்த்துகிறோம்







தேவ கிருபையினால் நமது பேராயர். வே. தேவதாஸ் அவர்களின் துணைவியார் சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள் பணித்தளத்திலே முழு மூச்சோடு இரவு பகலும் ஊழியங்களை நடத்தி வருகிறார்கள். கடினமான ஊழியத்தின் மத்தியிலும் ஒவ்வொரு வருடமும் வேத அறிவை வளர்த்துக்கொள்ள அரோமா வேதாகமக் கல்லூரியின் வழியாக B.Th., இளங்கலை பட்டம் முடித்து அதன்பின் IICM மூலமாக M.Th., முதுகலைப் பட்டம் முடித்து இவ்வாண்டில் Doctor of Philosophy (Bibilical Study) படிப்பை வெற்றிகரமாக முடித்தார்கள்.

கடந்த 27.7.2013 அன்று சென்னையில் நடைபெற்ற IICM பட்டமளிப்பு விழாவில், International Institute of In. Corp. Church Management, Florida. USA, மூலமாக டாக்டர் பட்டம் பெற்றுள்ளார். மேலும், தேவ நாம மகிமைக்காக இன்னும் பல பட்டங்களைப்பெற்று பீல் ஆதிவாசி மக்களின் மத்தியில் நடைபெறும் ஊழியப்பணிக்கும் தேசத்திற்கும் ஆசீர்வாதமாகத் திகழ வாழ்த்துகிறோம்.